இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

வருடாந்த அறிக்கை

2019

தவிசாளரின் செய்தி

வடகிழக்கு பிரேசிலைப் பூர்வீகமாகக் கொண்ட மரமுந்திரித் தாவரமானது 16 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் கோவா மாநிலத்தின் ஊடாக போர்த்துக்கேயரினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இலங்கையின் வடமேற்குக் கரையோரத்தில் பயிரிடப்பட்டுள்ளதோடு, பின்னர் இது வறட்சியான காலநிலையைக் கொண்ட வலயங்களில் பயிரிடப்படக் கூடிய ஒரு பயிராகப் பிரபலமடைந்துள்ளது. தற்பொழுது வணிக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உயர் விவசாய சாத்தியப்பாட்டைக் கொண்ட ஒரு பயிராக இதனை அறிமுகப்படுத்தலாம்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மரமுந்திரி செய்கை மீது கவனம் செலுத்தியதோடு, குறிப்பாக 1973 ஆம் ஆண்டில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டதன் பின்னர் மரமுந்திரி கைத்தொழிற்துறையானது அதிக முக்கியத்தும் பெற்றுள்ளது. மரமுந்திரி கைத்தொழிற்துறையின் அபிவிருத்திப் பணிகள் பிரதானமாக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தற்போது முந்திரிப் பருப்பு மூலம் தயாரிக்கப்பட்ட உணவுகள் குறிப்பாக சிங்களப் புதுவருடம் மற்றும் நத்தார் பண்டிகையின் போது இனிப்புப் பண்டங்கள், கேக் தயாரிக்கவும், கறியாகவும் பயன்படுத்தப்படுவதோடு, முந்திரித் தோலிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் திரவத்தை (Cashew Nut Liquid Oil) லெக்கர், நிறப்பூச்சு, ப்ளாஸ்டிக் உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்த முடியும்.

முந்திரிப் பருப்பு மற்றும் மரமுந்திரி உற்பத்திகளுக்கு உள்நாட்டைப் போன்றே வெளிநாட்டு சந்தையிலும் பாரிய கேள்வி நிலவுகிறது. இலங்கை முந்திரிப் பருப்புகளில் காணப்படும் தந்த நிறம், அளவில் பெரியதாகக் காணப்படல், முந்திரிப் பருப்பைச் சுற்றி சர்க்கரைத் தன்மையுடன் காணப்படுவதால் உலகச் சந்தையில் பாரிய கேள்வி நிலவுவதோடு, அந்தக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குப் போதியளவு முந்திரி உற்பத்தி மேற்கொள்ளப்படுவதில்லை. கோதுடனான மரமுந்திரிகைக்கு வருடாந்தம் ஏறத்தாழ 25,000 மெட்றிக் டொன் அளவிலான கேள்வி நிலவுவதோடு, ஏறத்தாழ 12,000 மெட்றிக் டொன் அளவு மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நிலைமையானது ஏற்றுமதி ஊக்குவிப்பில் பாதகமானதொரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

2018 ஆம் ஆண்டில் கோதுடனான மரமுந்திரிகை அறுவடையானது 8,014 மெ. டொ. ஆகக் காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் அது 12,000 மெ.டொ. ஆகும். இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 04% வளர்ச்சியாகும். இந்த ஆண்டிற்கான ஏற்றுமதி அளவானது 47.40 மெ.டொ. ஆவதுடன், ஏற்றுமதிப் பெறுமதி ரூ. 93.57 மில்லியனாகும்.

2019 ஆம் ஆண்டில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் அனைத்துச் சேவை வழங்கல்களையும் மற்றும் வணிக நடவடிக்கைகளையும் மிகத் திருப்திகரமான வகையில் மேற்கொள்ள முடிந்ததோடு, அதன் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பு குறித்து எனது இதயபூர்வமான நன்றிகளையும் பாராட்டுக்களையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாகக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து செயற்பாடுகளையும் உயர்ந்த விளைத்திறனுடனும் வினைத்திறனுடனும் பேணுவதற்கு பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் மற்றும் உதவி பொது முகாமையாளர்கள் உள்ளடங்கலாக அனைத்துப் பணிக்குழுவினரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், அவர்களது சேவையையும் பாராட்டுகிறேன்.

சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள், மரமுந்திரிகை உற்பத்தி ஏற்றுமதியாளர்கள், சிறிய மரமுந்திரிகை நில உரிமையாளர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தரப்பினர்களும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் அடிப்படையில் இந்த வெற்றியை அடைந்து கொள்ள முடிந்துள்ளதோடு, அது தொடர்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்களான **கௌரவ நவீன் திசாநாயக்க அவர்கள்** மற்றும் **கௌரவ ரமேஷ் பத்திரன அவர்கள்** மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் **கௌரவ வடிவேல் சுரேஷ் அவர்கள்** மற்றும் குறித்த அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளடங்கலாக அமைச்சு பணிக்குழுவினரால் எமக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல் தொடர்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தம்சிறி பண்டார கருணாரத்ன
தவிசாளர்
இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

உள்ளடக்கம் **பக்கம்**

01.	நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு	01-04
02.	இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிறுவனக் கட்டமைப்பு	04-18
03.	கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகள்	19-26
04.	நிர்வாக நடவடிக்கைகள்	27-28
05.	பணிப்பாளர் சபை அறிக்கை	29-31
06.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை	32-35
07.	2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை	36-39
08.	இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதன் பொருட்டு முன்னெடுக்க உத்தேசித்துள்ள இடைக்கால நடவடிக்கைகள்	40-47
09.	செயலாற்றுகை தொடர்பில் 5 வருடங்களுக்கான பொழிப்பு	48-50
10.	கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்	51-64
11.	1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	65-78
12.	கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை சீராக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள்	79-94
13.	5 வருடங்களுக்கான கணக்குப் பொழிப்பு	95

1. நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

1.1.1 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தாபிப்பு

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனமானது 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதிய மற்றும் 60/7 அம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமையத் தாபிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆரம்பம் முதல் பொது வியாபார முயற்சியாக செயற்படுகிறது. அத்துடன், மரமுந்திரிகை கைத்தொழிற் துறைக்கான அனைத்து சேவைகளையும் வழங்கும் அதே வேளை வணிக நடவடிக்கைகளையும் இலாபகரமான மட்டத்தில் மேற்கொள்கிறது.

1.1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

1.1.2.1 தொலைநோக்கு

உயர்தரமான மரமுந்திரிகைகளை உற்பத்தி செய்வதனூடாக உலகில் மரமுந்திரிகை ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடாக மாற்றுதல்.

1.1.2.2 செயற்பணி

மரமுந்திரிகை செய்கை, உற்பத்தி, செயன்முறைத் தொழிநுட்பம், பெறுமான சேர்ப்பு, ஆராய்ச்சிகள் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு விவசாயிகள் மற்றும் ஏற்புடைய தரப்பினருக்குத் தொழில்சார் வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் நீண்ட கால ரீதியிலான செயலூட்டல் திறனை அடையக் கூடிய வகையில் மரமுந்திரிகைக் கைத்தொழிற் துறையை விருத்தி செய்தல்.

1.1.2.3 இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நாமம் மற்றும் உயர் ஏற்றுமதித் திறனுக்காக இலங்கையில் மரமுந்திரிகை உற்பத்தியை

விஸ்தரித்தல், செயன்முறைப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தலின் விளைத்திறனை உயர்த்துதல்.

- பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதன் மூலம் அறுவடையை அதிகரித்தல்
- மரமுந்திரி செயன்முறைப்படுத்தல் கைத்தொழிலின் மற்றும் பெருந்தோட்டங்களின் விளைத்திறன்
- இலங்கை மரமுந்திரிக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நாமம் ஒன்றை உருவாக்குதல்
- பெறுமதி சேர்த்தல் மற்றும் புதிய உற்பத்திகளின் அபிவிருத்தி
- மரமுந்திரி ஏற்றுமதியை ஊக்குவித்தல்
- மரமுந்திரி உற்பத்தியில் இலங்கை முன்னணி வகித்தல்
- இலாபம் ஈட்டுவதன் மூலம் தன்னிறைவுப் பெற்ற அரச கூட்டுத்தாபனமாதல்

1.1.2.4 அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் முதலாவது அட்டவணைக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் பணிகள்

(அ) மரமுந்திரிகைச் செய்கை, செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரி உற்பத்தி செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் திட்டங்களை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குதல்

(ஆ) மரமுந்திரிகைச் செய்கை, செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரி உற்பத்தி செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(இ) மரமுந்திரிகைச் செய்கை, செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரி உற்பத்தி செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தலை விருத்தி செய்யும் குறிக்கோளுடன் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(ஈ) மரமுந்திரிகைச் செய்கை, செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரி உற்பத்தி செயன்முறைப்படுத்தல்

மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான தொழிநுட்ப சந்தைப்படுத்தல் மற்றும் ஏனைய தகவல்களைத் திரட்டுதல், தயாரித்தல், பிரபலப்படுத்தல் மற்றும் விநியோகம் மற்றும் குறித்த நடவடிக்கைகளின் போது மற்றையவர்களுடன் இணைந்து செயற்படல்.

(உ) மரமுந்திரி மற்றும் மரமுந்திரி உற்பத்தியை செயன்முறைப்படுத்துவதற்காகத் தாபிக்கப்படும் தொழிற்சாலைகளை நிர்மாணிக்க வேண்டிய இடங்கள், அவற்றின் அளவு மற்றும் தொழிநுட்பத் தரங்களை நிர்ணயித்தல் மற்றும் புதிய தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அப்போது காணப்படும் தொழிற்சாலைகளை செயற்படுத்தல்

(ஊ) மரமுந்திரி மற்றும் மரமுந்திரி உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல்

(எ) மரமுந்திரிகைச் செய்கை, செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல், மரமுந்திரி உற்பத்தி செயன்முறைப்படுத்தல், சந்தைப்படுத்தல் தொடர்பான வேலைகளை செய்வதற்குத் தேவையான நபர்களுக்குப் பயிற்சியளிப்பதன் பொருட்டு வசதிகளை வழங்குதல்

(ஏ) மரமுந்திரிச் செய்கைகள் செயன்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தலை விருத்தி செய்யும் பணிக்குத் தேவையான அடிப்படை அமைப்பைத் தாபித்தல் மற்றும் குறித்த அமைப்புக்களைத் தாபிப்பதற்கு உதவுதல்

(ஐ) மரமுந்திரி உற்பத்தியை பிரச்சாரப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதற்குத் தேவை எனக் கருதப்படும் நடவடிக்கைகளை எடுத்தல், உலக சந்தையில் குறித்த உற்பத்திகளுக்கு நிலவும் கேள்வியை மேம்படுத்தல் மற்றும் குறித்த பணிக்கு அல்லது அதனுடன் தொடர்புடைய இடைநேர் விளைவான பணிகளுக்கான பிரச்சார

நடவடிக்கைகளுக்கு நிதி அளித்தல், குறித்த நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் குறித்த நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கலை ஆரம்பித்து அதற்கு அனுசரணை வழங்குதல்

2. இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிறுவனக் கட்டமைப்பு

2.1 பணிப்பாளர் சபை

தொடரி லக்கம்	பெயர்	பதவி
01.	திரு. டி.பி கருணாரத்ன	தலைவர் (2019.11.27 வரை)
02.	திரு. எம். டப்ளியூ.எம். பண்டாரதிலக்க	பிரதி தலைவர் (2019.11.27 வரை)
03.	திருமதி. அமந்தா கருணாதிலக்க	பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரி உறுப்பினர் 2019.03.06 இருந்து 2019.11.27 வரை)
04.	திரு. கே.எஸ்.விஜயகீர்த்தி	பணிப்பாளர் சபை உறுப்பினர் (பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் உறுப்பினர் - 2019.11.27 வரை)
05.	திரு.ஜி.ஏ.டி. டப்ளியூ . தர்மசிறி	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.11.27 வரை)
06.	திரு.ஆர்.எம்.டி.பி. டப்ளியூ .எம்.எம்.பி. யட்டவர	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.11.27 வரை)
07.	திரு. டீ.டப்ளியூ.சீ.ஏ.ஆர். சந்திரா	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.11.27 வரை)
08.	திரு. கீர்த்தி ஜயக்கொடிஆரச்சி	பொது முகாமையாளர், (2019.03.14 வரை) பணிப்பாளர் சபை செயலாளர்
09.	திரு.பி.பி.கொடிக்கார	பொது முகாமையாளர், (கடமை மேற்கொள்ளல்) 2019.03.15 இருந்து 2019.11.21 வரை பணிப்பாளர் சபை செயலாளர்

2.1 அட்டவணை : 2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரை பணிப்பாளர் சபையிலிருந்த உறுப்பினர்கள்

2.2 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

தொடரிலக்கம்	பெயர்	பதவி
01.	திருமதி. அமந்தா கருணாதிலக்க	குழுத் தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - பொதுத் திறைசேரி பிரதிநிதி (2019.05.17 முதல் 2019.11.27 வரை)
02.	திரு. ஜி.எல்.ரூபசிங்க	குழு கண்காணிப்பாளர், கணக்காய்வு அத்தியட்சகர் (கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்), (2019.05.17 முதல்)
03.	திரு.ஜி.ஏ.டி. டப்ளியூ. தர்மசிறி	குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.05.17 முதல் 2019.11.27 வரை)
04.	எம்.டி.பி. டப்ளியூ.எம்.எம்.பண்டார யட்டவர	குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.05.17 முதல் 2019.11.27 வரை)
05.	திரு. டீ.கே.ஜயக்கொடிஆரச்சி	பொது முகாமையாளர், குழு செயலாளர் (2019.03.14 வரை)
06.	திரு.பி.பீ.கொடிக்கார	பொது முகாமையாளர், (கடமைகளை மேற்கொள்ளல்) குழு செயலாளர் (2019.03.15 ஆம் திகதி முதல் 2019.11.21 வரை)
07.	திரு.வீ.யூ.லியனகே	உதவி பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு

2.2 அட்டவணை : 2019 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2.3 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட முகாமைத்துவம்

i. திரு. டீ.கே.ஜயக்கொடிஆரச்சி - பொது முகாமையாளர (2019.03.14 வரை)

ii. திரு.பி.பீ.கொடிக்கார - பொது முகாமையாளர், (கடமைகளை மேற்கொள்ளல்) குழு செயலாளர் (2019.03.15 ஆம் திகதி முதல் 2019.11.21 வரை)

iii.மேஜர் டீ.மெதகெதர - பொது முகாமையாளர் (2019.11.27 ஆம் திகதி முதல்

2.4 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் மத்திய முகாமைத்துவக் குழு

i.	திரு.எம்.டி.எஸ்.கே. பீரிஸ்	-	உதவி பொது முகாமையாளர் - நிதி
ii.	ஜி. பீ. பீ. திரு.சுரேந்திர	-	உதவி பொது முகாமையாளர் - விஸ்தரிப்பு மற்றும் ஆராய்ச்சி
iii.	திரு.வீ.யூ.லியனகே	-	உதவி பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வாளர்
iv.	திரு.ஆர்.எம்.பி.ஜயதிஸ்ஸ	-	உதவி பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல்
v.	திரு.பி.எம்.ஏ.பி.கே.விஜேதுங்க	-	உதவி பொது முகாமையாளர் - பெருந்தோட்டத் துறை

2.5 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிறுவனக் கட்டமைப்பு

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தில் 07 பிரிவுகள் காணப்படுவதுடன், குறித்த ஒவ்வொரு பிரிவுகளும் மற்றும் குறித்த ஒவ்வொரு பிரிவினதும் கடமைப் பொறுப்புக்கள் பின்வருமாறு.

01. விஸ்தரிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

02. நிர்வாகப் பிரிவு

03. நிதிப் பிரிவு

04. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

05. பெருந்தோட்டத் துறைப் பிரிவு

06. சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல் பிரிவு

07. கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு

2.5.1 விஸ்தரிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

விஸ்தரிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவானது உதவி பொது முகாமையாளர் ஒருவரின் கீழ் நிர்வகிக்கப்படுவதோடு, குறித்த பிரிவுகளின் கடமைப் பொறுப்புக்கள் பின்வருமாறு.

விஸ்தரிப்பு பிரிவு

- மரமுந்திரி செய்கையை விஸ்தரித்தல் மற்றும் பயிர்ச் செய்கையின் விளைத்திறனை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு உதவி வழங்குதல்.
- விவசாயிகளின் சிக்கல்கள் மற்றும் தடைகளை இனங் கண்டு அதற்குத் தீர்வுகளை வழங்குதல்
- இயற்கை சூழலை பாதுகாத்தல் மற்றும் சகவாழ்வை உயர்த்துவதற்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் மூலம் விளைத்திறனை உயர்த்துதல்.
- மரமுந்திரி செய்கையின் அபிவிருத்திக்காக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை ஒருங்கிணைத்தல்.
- மரமுந்திரிப் பருப்பு செயன்முறைப்படுத்தலை உயர்த்தல், முந்திரி செய்கையாளர்களுக்கும் மரமுந்திரி செயன்முறைப்படுத்துபவர்களுக்கும் விழிப்புணர்வூட்டல்.

ஆராய்ச்சிப் பிரிவு

- அதிக விளைத்திறனுடனான பல்வேறு காலநிலை மாற்றங்களுக்கும் எதிராக செயற்படும் குறைந்தபட்ச இரசாயன பசளை மற்றும் கிருமிநாசினி பாவனையுடன் புதிய மரமுந்திரி வகைகளை அறிமுகப்படுத்தல்.
- உயர் தொழிநுட்ப முறைககளைப் பயன்படுத்துவதன் மூலம் சூழல் பாதுகாப்புடன் அதிக விளைதிறனைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டல்.
- நுகர்வோரின் தேவைக்குப் பொருத்தமானவாறு விளைத்திறனை உயர்த்துதல், பெறுமதி சேர்த்தல், அறுவடைக்குப் பிந்தைய தொழிநுட்பம் மற்றும் பொதியிடல் குறித்து கவனம் செலுத்தல்.

2.5.2 நிர்வாகப் பிரிவு

- விவசாயிகள், செயன்முறைப்படுத்துபவர்கள், சந்தைப்படுத்துபவர்கள், ஆபத்திற்கு முகங் கொடுக்கத் தயாராகவுள்ளவர்களுக்கு சேவைகளை

வழங்கும் அதே வேளை கூட்டுத்தாபனத்தின் பணிகளின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனை உயர்த்துவதன் மூலம் இலாபத்தை உயர்த்தல்.

- கூட்டுத்தாபனத்தின் பதவியணியினருக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து பதவியணியின் வினைத்திறனை உயர்த்தல்.
- நிர்வாக ஒழுங்குவிதிகளைத் தொகுத்தல்

2.5.3 நிதிப் பிரிவு

- சரியான நிதி முகாமைத்துவத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனை உயர்த்தல்.
- ஏற்புடைய நிதி சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
- பல்வேறு பிரிவுகளின் மற்றும் கருத்திட்டங்களின் வருமான, செலவு, இலாப, நட்ட நிலைமைகளைக் குறிப்பிட்டு மாதாந்த அறிக்கைகளைத் தயாரித்தல்.
- ஒவ்வொரு வருட இறுதியிலும் வணிக மற்றும் சேவை பிரிவுகளின் இலாபத்தைக் குறிப்பிட்டு இறுதிக் கணக்குகளைத் தயாரித்து அமைச்சிடம் சமர்ப்பித்தல்.

2.5.4 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

- இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் நிதி சாராத செயற்பாடுகளுக்கு சுயாதீன உறுதிப்படுத்தல்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் அடிப்படையில் நியாயம் மற்றும் போதுமான தன்மையை உருவாக்குவதற்கு உள்ளக ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் மோசடிகள், ஊழல்கள் மற்றும் தவற விடபட்டவற்றைக் கண்டறிதல்.
- முறையான உத்திகள் மற்றும் நேர்த்தியான முறைகளைப் பயன்படுத்தி மற்றும் வளங்களின் விளைத்திறன், வினைத்திறனான பொருளாதார நடைமுறைகளைப் பயன்படுத்தி சிறந்த நிர்வகிப்புடன் மற்றும்

நோக்கத்துடன் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நெறிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான நீண்ட கால உறுதிப்படுத்தல்கள் மூலம் முன்னேற்றத்தை உறுதி செய்தல்.

2.5.5 பெருந்தோட்டத் துறைப் பிரிவு

- கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மற்றும் வணிக நாற்று மேடைகளை இலாபகரமானதாகப் பேணுதல்.
- இயற்கை சூழல் பாதுகாக்கப்படும் வகையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தோட்டங்கள் மற்றும் நாற்று மேடைகளை அண்மித்த கிராமப் புறங்களிலுள்ள மக்களுடன் சினேகபூர்வமாக செயற்பட்டு உற்பத்தி மற்றும் விளைத்திறனை உயர்த்தல்.
- மரமுந்திரி செய்கையை முன்மாதிரியான பயிர்ச் செய்கையாகப் பேணி முதலீட்டாளர்கள் மற்றும் செயன்முறைப்படுத்துபவர்களை ஈர்த்தல்.

2.5.6 சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல் பிரிவு

- உற்பத்தி ஆகு செலவைக் குறைத்தல் மற்றும் விளைத்திறனை அதிகரிப்பதன் மூலம் மரமுந்திரி செயன்முறைப்படுத்தல் கைத்தொழிற் துறையை உயர்த்தல்.
- சர்வதேசத் தர நியமங்களுக்குப் பொருத்தமானவாறு மரமுந்திரி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் தரம் மற்றும் சுவையை அதிகரித்தல்.
- மரமுந்திரி சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல் கைத்தொழிற் துறையின் முன்னேற்றத்திற்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணி வருடாந்தம் 10% அபிவிருத்தியை அந்தத் துறையில் ஏற்படுத்தல்.

- இலாபத்தை அதிகரித்து மற்றும் சந்தைப் போட்டியாளர்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணி சந்தைப்படுத்தல் துறையை வினைத்திறன் மிக்கதாகவும் விளைத்திறன் மிக்கதாகவும் பேணுதல்.
- ஊழியர்களின் அறிவை இற்றைப்படுத்தல் மற்றும் திறன்களை விருத்தி செய்வதன் மூலம் அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்தல் மற்றும் வலுப்படுத்தல்.

2.5.7 கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு

- இணைந்த திட்டம் மற்றும் செயற்திட்டம் மற்றும் வருடாந்தம் தொகுத்தல்.
- இணைந்த திட்டம் மற்றும் செயற்திட்டத்திற்கு ஏற்புடைய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உண்மையான செயற்பாடுகளுடன் ஒப்பிட்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். உயர்ந்த முகாமைத்துவம் பணிப்பாளர் சபை ஏனைய தரப்பினருக்கு அறிவித்தல் மற்றும் இலக்குகளை அடைவதற்கான தடைகளுக்குத் தீர்வு காணல், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் செயலாற்றுகை மற்றும் சிக்கல்களை அறிக்கையிடல்.
- மரமுந்திரிகை செய்கையாளர்கள் மற்றும் செயன்முறைப்ப-டுத்துபவர்களின் செயற்பாடுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அனைத்து வணிக செயற்பாடுகள் தொடர்பில் தரவுக் களஞ்சியமொன்றைப் பேணல்.
- குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான தடைகளை இனங்காணல், அதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள், குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்கான திட்டங்களை ஆகக் குறைந்த ஆகு செலவில் வகுத்தல்.
- மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் பெற்றுக் கொள்ளும் வெற்றிகள் மற்றும் நற்பெயரை உயர்த்துதல், மரமுந்திரிகை செய்கையின் நன்மைகளைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்குரிய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.6 தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்

2.6.1 தலைமை அலுவலகம்

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்
இலக்கம் 1334, பழைய கோட்டே வீதி, ராஜகிரிய.

தொலைபேசி :

தவிசாளர்	-	0112 - 871005
பிரதி தவிசாளர்	-	0112 - 869844
பொது முகாமையாளர்	-	0112 - 876134
தொலைநகல்	-	0112 - 867843
மின்னஞ்சல்	-	cashewco@dialogsl.net
இணையத்தளம்	-	www.cashew.lk

2.6.2 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகங்கள், தோட்டங்கள், நடுகைப் பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் மற்றும் செயன்முறைப்படுத்தல் அலகுகள்

பிராந்திய அலுவலகங்கள்		**உள்ளடக்கப்படும் மாவட்டங்கள்**
1. புத்தளம் பிராந்திய அலுவலகம்	-	புத்தளம் / குருநாகல்
2. அம்பாந்தோட்டை பிராந்திய அலுவலகம்	-	அம்பாந்தோட்டை / இரத்தினபுரி
3. அனுராதபுர பிராந்திய அலுவலகம்	-	அனுராதபுரம்
4. நாலந்தை பிராந்திய அலுவலகம்	-	மாத்தளை/ பொலன்னறுவை
5. மொனராகலை பிராந்திய அலுவலகம்	-	மொனராகலை
6. மஹியங்கனை பிராந்திய அலுவலகம்	-	கண்டி/ பதுளை
7. அம்பாறை பிராந்திய அலுவலகம்	-	அம்பாறை
8. மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம்	-	மட்டக்களப்பு / திருகோணமலை
9. கிளிநொச்சி பிராந்திய அலுவலகம்	-	கிளிநொச்சி / முல்லைத்தீவு/ யாழ்ப்பாணம்/வவுனியா/ மன்னார்

2.7 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்கள்

தொட ரிலக்கம்	தோட்டப் புறத்தின் பெயர்	அமைந்துள்ள மாவட்டம்	மொத்த ஏக்கர் அளவு	பயிரிடப்பட்டு ள்ள ஏக்கர் அளவு
01,	கமன்தளுவ தோட்டப்புறம்	புத்தளம்	548	494
02,	ஆச்சிகெவத்தை தோட்டப்புறம்	புத்தளம்	961	961
03,	எளுவன்குளம் தோட்டப்புறம்	புத்தளம்	641	210
04,	ஹாடி தோட்டப்புறம்	மட்டக்களப்பு	365	190
05,	விலச்சிய தோட்டப்புறம்	அனுராதபுரம்	25	25
06,	நாலந்தை தோட்டப்புறம்	மாத்தளை	135	50
07,	பூநகரி	கிளிநொச்சி	479	479

2.7 **அட்டவறண** : **இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்கள்**

2.7 **புகைப்படம்** : நாலந்தை மரமுந்திரி தோட்டம் – மாத்தளை மாவட்டம்

2.8 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான விதை பூங்காக்கள்

தொடரி லக்கம்	பூங்கா	அமைந்துள்ள மாவட்டம்	மொத்த ஏக்கர் அளவு	பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் அளவு
01.	மஹஓய விதை பூங்கா	அம்பாறை	81	45
02.	சுதுவத்துர ஆர விதை பூங்கா	மொனராகலை	45	45
03.	கொண்டாச்சி விதை பூங்கா	மன்னார்	6,000	1,450
04.	திரியாய விதை பூங்கா	திருகோணமலை	681	10
05.	மாங்கேணி தோட்டம்	மட்டக்களப்பு	280	130

2.8 **அட்டவணை**: விதை பூங்கா அமைந்துள்ள காணியின் நிலப் பரப்பு

2.8 புகைப்படம் : மாங்கேணி விதை பூங்கா - மட்டக்களப்பு மாவட்டம்

2.9 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நாற்று மேடைகள்

தொடரிலக்கம்	மத்திய நாற்று மேடையின் பெயர்	உள்ளடக்கப்படும் மாவட்டங்கள்	(ஏக்கர்)	நாற்று உற்பத்தித் திறன் (நாற்றுக்களின் எண்ணிக்கை)
01.	மிஹிந்தலை நாற்று மேடை	அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்	2.5	120,000
02.	தம்புள்ளை நாற்று மேடை	மாத்தளை, பொலன்னறுவை	3.0	25,000
03.	கமன்தளுவ நாற்று மேடை	புத்தளம் / குருநாகல்	1.0	150,000
04.	ஹாடி நாற்று மேடை	மட்டக்களப்பு /திருகோணமலை	1.0	10,000
05.	கும்புக்கன நாற்று மேடை	மொனராகலை	3.0	50,000
06.	அளுத்தரம நாற்று மேடை	பதுளை / கண்டி	2.0	50,000
07.	சந்திரிகாவெவ நாற்று மேடை	அம்பாந்தோட்டை/ இரத்தினபுரி	0.5	20,000

2.9 அட்டவணை : நாற்று மேடைகள் அமைந்துள்ள நிலப்பரப்பு

2.9 புகைப்படம் : கமன்தளுவ ஒட்டு மரமுந்திரி நாற்று மேடை - புத்தளம்

2.10 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரி செயன்முறையாக்க நிலையங்கள்

தொடரிலக்கம்	மரமுந்திரி செயன்முறையாக்க நிலையங்கள்	மாவட்டம்
01	நெந்தகமுவ செயன்முறையாக்க நிலையம்	கம்பஹா
02	புத்தளம் செயன்முறையாக்க நிலையம்	புத்தளம்

2.11 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரி ஆராய்ச்சி அலகுகள்

தொடரிலக்கம்	ஆராய்ச்சி அலகுகள்	மாவட்டம்
01	கமன்தளுவ ஆராய்ச்சி அலகு	புத்தளம்
02	புத்தளம் ஆராய்ச்சி அலகு	புத்தளம்

2.12 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிரதான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி கூட்டுறவு

வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2.13 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள்

தொடரிலக்கம்	கூட்டுத்தாபன மரமுந்திரி விற்பனை நிலையங்கள்	மாவட்டம்
01	இலக்கம் 1334, பழைய கோட்டே வீதி, ராஜகிரிய	கொழும்பு
02	இலக்கம் 518, காலி வீதி, கொழும்பு 03	கொழும்பு

2.14 **இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் அங்கீகார வழங்கப்பட்ட விற்பனை நிலையங்கள்**

தொடரி லக்கம்	கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்ட விற்பனை நிலையங்கள்	மாவட்டம்
01	ரந்திய ப்ரூட்ஸ் அன்ட் நட்ஸ், பயாகல, மக்கொன	களுத்துறை
02	ஆனந்த புட் சிட்டி, இலக்கம் 272, அங்குருவாத்தொட்ட வீதி, ஹொரனை	களுத்துறை
03	பாணந்துறை கோப் சிட்டி, வ/ப பாணந்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், ஜனப்பிரிய மாவத்தை, பாணந்துறை	களுத்துறை
04	நிவ் அமெரிக்கன் சிக்கன் ஹட், 16, ஸ்ரீ சாராநந்த மாவத்தை, களுத்துறை	களுத்துறை
05	ஒன்ரோ பாமசி, இல. 25, நாகொட வீதி, கட்டுக்குருந்தை	களுத்துறை
06	நியூ மோனிஸ் பேக்கரி, காலி வீதி, மக்கொன	களுத்துறை
07	சாகர பேக்கர்ஸ், அங்குருவாத்தொட்ட வீதி, ஹொரனை	களுத்துறை
08	ரோய் க்ரொசரி, மத்துகமை வீதி, கட்டுக்குருந்த சந்தி	களுத்துறை
09	தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை, வெலிசர	கம்பஹா
10	Ranjanas 7 Stories, இலக்கம் 318, காலி வீதி, கொழும்பு 04	கொழும்பு
11	பனை அபிவிருத்தி சபை, காலி வீதி, பம்பலப்பிட்டி	கொழும்பு
12	இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கம், இலக்கம் 21, காலி வீதி, தெஹிவளை	கொழும்பு
13	உதம்சா பால் சபை, 978 D 3, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்தை	கொழும்பு
14	Colombo Cricket Club, மெட்லன்ட் சந்திரவங்கய, கொழும்பு 07	கொழும்பு
15	லயன் க்ரொசரி, மாக்கும்புர, பன்னிப்பிட்டிய வீதி, கொட்டாவ	கொழும்பு
16	தலகல ஸ்டோர்ஸ், தலகல	கொழும்பு
17	ஜே.எப்.டுவர்ஸ் அன்ட் டிராவல்ஸ், ஜாவத்தை வீதி, பம்பலப்பிட்டி	கொழும்பு
18	லயன் க்ரொசரி, மாக்கும்புர, பன்னிப்பிட்டிய வீதி, கொட்டாவ	கொழும்பு
19	பெனோராமா சைனீஸ் ரெஸ்டுரண்ட், கொட்டாவ	கொழும்பு
20	Namunukula Dairy Stores, வத்தளை	கம்பஹா
21	மாஸ்ட்டர் ஷொப்பர், கொழும்பு 01	கொழும்பு
22	ரோயல் பேக்கரி, வெள்ளவத்தை	கொழும்பு

தொடரி லக்கம்	கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்ட விற்பனை நிலையங்கள்	மாவட்டம்
23	திருமதி. கப்புவத்த, நாவல வீதி, ராஜகிரிய	கொழும்பு
24	பிரதம அமைச்சர் அலுவலகம், கொழும்பு	கொழும்பு
25	Vintage Teas, அங்கொடை	கொழும்பு
26	பலாங்கொடை புட் ஷொப்	இரத்தினபுரி
27	கெண்டி லைன்ஸ், பார்க் வீதி, கேகாலை	கேகாலை
28	EPPCO Mini Mart, பிரதான வீதி, மாவனெல்ல	கேகாலை
29	சியுமி புட் ப்ரொடக்ட்ஸ், இலக்கம் 499, பிரதான வீதி, கேகாலை	கேகாலை
30	வரையறுக்கப்பட்ட யட்டிநுவர கங்கபலாத்த பலநோக்கு கூட்டுறவு சங்கம், பொல்கஹமுல சந்தி, பேராதனை	கண்டி
31	வரையறுக்கப்பட்ட யட்டிநுவர மெதபலாத்த பலநோக்கு கூட்டுறவு சங்கம், எம்பில்மீகம, பிலிமத்தலாவை	கண்டி
32	வரையறுக்கப்பட்ட மத்திய மாகாண கூட்டுறவு சங்கம், எஹெலேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி	கண்டி
33	வரையறுக்கப்பட்ட பூஜாப்பிட்டி கூட்டுறவு சங்கம், பூஜாப்பிட்டி	கண்டி
34	வரையறுக்கப்பட்ட ஹாரிஸ்பத்துவ வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், மாத்தளை வீதி, அலவத்துகொடை	கண்டி
35	வரையறுக்கப்பட்ட குண்டசாலை பலநோக்கு கூட்டுறவு சங்கம், மெணிக்ஹின்ன	கண்டி
36	வரையறுக்கப்பட்ட கண்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம், கோப்சிட்டி விற்பனை நிலையம், பல்லேகெலே	கண்டி
37	கோப்சிட்டி, குண்டசாலை	கண்டி
38	செப்கோ சுப்பர், போகம்பர	கண்டி
39	பலநோக்கு கூட்டுறவு சங்கம் - கண்டி	கண்டி
40	Dr. Smoothy Cafe, கண்டி	கண்டி
41	மியுலா ஷொப், கண்டி	கண்டி
42	உணவகம், கண்டி	கண்டி
43	வரையறுக்கப்பட்ட கண்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம், கோப்சிட்டி விற்பனை நிலையம், மாத்தளை	மாத்தளை
44	வரையறுக்கப்பட்ட கண்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம், கோப்சிட்டி விற்பனை நிலையம், லக்கல	மாத்தளை

தொடரி லக்கம்	கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்ட விற்பனை நிலையங்கள்	மாவட்டம்
45	P & J சிட்டி, காமிணி மாவத்தை, காலி	காலி
46	ப்ரெஷ் பாம் ஷொப், காலி வீதி, ஹிக்கடுவை	காலி
47	கோல்டன் மேட், 144, காலி வீதி, அஹங்கம	காலி
48	ஹரிஸ்சந்திர மில்ஸ், டெல்பட் வீதி, காலி	காலி
49	இந்திரா வைன் ஸ்டோர்ஸ், ஹிக்கடுவை	காலி
50	ருகுணு ரசார, லபுதுவ	காலி
51	ருகுணு ரசார, தெலிஜ்ஜவில	மாத்தறை
52	ருகுணு ரசார, மாத்தறை	மாத்தறை
53	சம்பத் பாமசி அன்ட் க்ரொசரி, 39E, மாத்தறை வீதி, அக்குரஸ்ஸ	மாத்தறை
54	அபேகுணவர்தன ஸ்டோர்ஸ், தெனியாய	மாத்தறை

2.15 இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா பங்களாக்கள்

சுற்றுலா பங்களாக்கள் **மாவட்டம்**

1. புத்தளம் சுற்றுலா பங்களா - புத்தளம்
2. ஹாடி சுற்றுலா பங்களா - மட்டக்களப்பு

Sri Lanka Cashew Corporation
Organization Structure



3. கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகள்

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்குக் கூட்டுத்தாபனமானது 04 பிரதான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

1. விஸ்தரிப்பு மானிய நிகழ்ச்சித் திட்டம்
2. தோட்டத்துறை அபிவிருத்தி, மறுசீரமைப்பு மற்றும் விளைத்திறனை விருத்தி செய்தல்
3. சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறையாக்கல் கைதொழிற் துறை அபிவிருத்தி
4. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி



3.1 வரைபடம்: 2019 இலங்கையில் மரமுந்திரி செய்கையின் கூட்டமைவு (ஏக்கர்)

ஏனைய கருத்திட்டங்கள்

- 'திவிநெகும' பொருளாதார பயிர்ச்செய்கை அலகுகள்
- வறிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் மற்றும் சமூகத்தினரை முன்னேற்றும் கருத்திட்டம்
- பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - மாத்தளை மாவட்டம்
- மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு திணைக்களத்துடன் ஒருங்கிணைந்த கருத்திட்டம்
- தேசிய ஒருமைப்பாடு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு/மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு தொடர்பான கருத்திட்டங்கள்

3.1 **விஸ்தரிப்பு மானிய நிகழ்ச்சித் திட்டம்**

3.1.1 **இலங்கையில் மரமுந்திரி செய்கையின் பரம்பல்**

2019 ஆம் ஆண்டில் இலங்கையின் மதிப்பிடப்பட்ட ஒட்டுமொத்த மரமுந்திரி செய்கை நிலப்பரப்பின் அளவு 164,108 ஏக்கர் ஆகும். 2019 ஆம் ஆண்டில் 19 மாவட்டங்களில் மானியத் திட்டங்களின் கீழ் 125 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டு மரமுந்திரி 1,968 ஏக்கர் மற்றும் விதை மரமுந்திரி 1,337 ஏக்கர் பயிரிடப்பட்டதுடன், இந்த மானியத் திட்டத்தின் வீட்டுத் தோட்டச் செய்கையின் கீழ் 1,195 ஏக்கருக்கு நாற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 11,069 குடும்பங்கள் பயன்களைப் பெற்றுள்ளன.

தொடரி லக்கம்	மாவட்டம்	ஒட்டு மரமுந் திரி (ஏக்கர்)	விதை மரமுந் திரி (ஏக்கர்)	வீட்டுத் தோட்டச் செய்கை	
				ஒட்டு மரமுந்தி ரி (ஏக்கர்)	விதை மரமுந்தி ரி (ஏக்கர்)
01.	புத்தளம்	320	80	50	25
02.	குருநாகல்	215	50	95	15
03.	அம்பாந்தோட்டை	65	70	55	65
04.	அனுராதபுரம்	313	12	75	-
05.	அம்பாறை	-	340	103	07
06.	பதுளை	125	-	50	-
07.	கண்டி	25	-	25	-
08.	இரத்தினபுரி	10	10	15	10
09.	மாத்தளை	145	-	40	-
10.	பொலன்னறுவை	70	-	20	-
11.	மொனராகலை	225	-	50	-
12.	மட்டக்களப்பு	30	200	15	55
13.	திருகோணமலை	50	100	20	30
14.	வவுனியா	100	100	50	50
15.	மன்னார்	50	100	-	50
16.	முல்லைத்தீவு	100	150	-	75
17.	கிளிநொச்சி	50	100	-	50
18.	யாழ்ப்பாணம்	25	25	-	50
19.	கேகாலை	50	-	50	-
	மொத்தம்	**1,968**	**1,337**	**713**	**482**

3.1.1 அட்டவணை : 2019 ஆம் ஆண்டின் மரமுந்திரி செய்கை மானிய நிலப்பரப்பு

3.1.2 **மரமுந்திரி செய்கை மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நன்மைகளை வழங்குதல்**

ஒட்டு மரமுந்திரி செய்கைக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.9,500/- தொகை மற்றும் விதை மரமுந்திரி செய்கைக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.3,500/- வீதம் இந்த மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும், ஒதுக்கப்பட்ட இந்த ஏற்பாடுகள் இந்தப் பணிக்கு எந்த வகையிலும் போதுமானதல்ல. தற்போது மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயப் பயிற்சி மற்றும் தொழிநுட்பத்தை வழங்குதல் உள்ளடங்கலாக ஏனைய கருத்திட்ட சேவைகள் இலவசமாக வழங்கப்படுவதுடன், பயிர்ச்செய்கை நிலப்பரப்பிற்குத் தேவையான ஒட்டு மரமுந்திரி நாற்றுக்கள் விதை மரமுந்திரி நாற்றுக்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் 9 பிராந்திய அலுவலகங்களின் மூலம் மரமுந்திரி பயிரிடப்பட்டுள்ள 19 மாவட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

3.2 **தோட்டத்துறை அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் விளைத்திறனை விருத்தி செய்தல்**

3.2.1 **மரமுந்திரி செய்கையின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்**

3.2.1.1 **நடுகைப் பொருட்கள் உற்பத்தி**

கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரி நடுகைப் பொருட்கள் உற்பத்தி நிலையங்களில் சிறந்த விவசாய முறைகளின் பாவனையின் கீழ் (GAP) உயர் தரத்திலான உற்பத்தித் தரங்களைப் பேணி 500,000 தாய் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஒட்டு கன்றுகள் மற்றும் விதை நாற்றுக்கள் உற்பத்தி செய்கையில் குறித்த தாய் விதைகள் மற்றும் தாய் தாவரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 310,000 தளிர்கள் பயன்படுத்தப்பட்டன.

3.2.1.2 **நாற்று மேடை முகாமைத்துவம்**

கூட்டுத்தாபனத்தின் மத்திய நாற்று மேடைகளிலிருந்து உயர் தரத்துடனான புதிய வகைகளைக் கொண்ட 270,294 ஒட்டு கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு,

மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு மற்றும் தனியார் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

தொடரிலக்கம்	நாற்று மேடையின் பெயர்	உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டு கன்றுகள்
1.	கமன்தலுவ	86,641
2.	தம்புள்ளை	25,391
3.	மிஹிந்தலை	87,118
4.	அளுத்தரம	23,095
5.	கும்புக்கன	24,964
6.	ஹாடி	9,598
7.	சந்திரிக்கா வெவ	13,487
	மொத்தம்	**270,294**

3.2.1.2 **அட்டவணை:** வருடத்தினுள் ஒட்டு கன்றுகளின் உற்பத்தி

மானிய முறைக்குத் தேவையான 79,945 நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டதோடு, அதற்கு கூட்டுத்தாபனத்தின் நாற்று மேடைகளுக்கு மேலதிகமாக வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் 6 நாற்று மேடைகள் தாபிக்கப்பட்டன.

3.2.1.3 தோட்டப்புறங்களில் புதிய பயிர்ச்செய்கை

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் புத்தளம், கமன்தளுவ, ஹாடி மற்றும் மாங்கேணி போன்ற தோட்டப்புறங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் எளுவன்குளம் விதை பூங்காவிற்கு அருகில் காணப்பட்ட தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான 441 ஏக்கர் அளவிலான காணியானது எளுவன்குளம் கட்டம்-II என கூட்டுத்தாபனத்தின் உடைமையாகக் கையகப்படுத்தப்பட்டதுடன், குறித்த காணியில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய மரமுந்திரி வகைகளின் கன்றுகள் நடப்பட்டன. அதே போன்று எளுவங்குளம் தோட்டப்புறத்தில் கட்டம் I இல் 7.5 எக்கரில் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன், புத்தளம் தோட்டப்புறத்தின் 3,750 வெற்று நாற்றுக்கள் நடப்பட்டன.

மாங்கேணி தோட்டத்தில் கட்டம் இல் 25 ஏக்கர் நிலப் பரப்பில் நாற்றுக்கள் நடப்பட்டதோடு, கொண்டாச்சி தோட்டத்தில் 5000 வெற்று நாற்றுக்களும் மஹஓய விதை பூங்காவில் 450 வெற்று நாற்றுக்களும் நாற்றுக்கள் நடப்பட்டன.

3.2.1.4 **அவிருத்தி கருத்திட்டத்திற்கு நாற்றுக்களை வழங்குல்**

2019 ஆம் ஆண்டில் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் 14,000 விதை மரமுந்திரி நாற்றுக்கள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதே போன்று சனாதிபதி அலுவலகத்தில் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டத்தின் போது விவசாயிகளுக்கு 50,000 நாற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் விவசாயிகளுக்கு 1,160 ஒட்டு மரமுந்திரி நாற்றுக்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டில் 4080 வெற்று நாற்றுக்கள் என்றவாறு மொத்தமாக 5,240 நாற்றுக்கள் வழங்கப்பட்டன.

3.2.1.5 **உற்பத்தித் திறனை மேம்படுத்தல்**

மரமுந்திரி செய்கையின் நோய்கள் மற்றும் கிருமிகள் கட்டுப்பாடு மற்றும் சிறந்த விவசாய முறைகளின் பாவனை மூலம் (GAP) விளைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் “ஹெலோபெல்டீஸ்” பூச்சியின் சேதம் மற்றும் தண்டு மற்றும் வேரை அரிக்கும் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு கிருமிகள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் அனுசரணையில் சிறந்த விவசாய முறைகளின் பாவனை மற்றும் மரமுந்திரி செய்கையின் கிருமிகள் கட்டுப்பாடு தொடர்பான 19 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் 950 விவசாயிகள் பங்குபற்றினர்.

3.3 சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல் கைத்தொழிற்துறை அபிவிருத்தி

3.3.1 செயன்முறைப்படுத்துபவர்களிடமிருந்து மரமுந்திரிப் பருப்புக்களைக் கொள்வனவு செய்தல்

சந்தையின் போட்டி நிலைகளுக்கு முகம் கொடுத்தல் மற்றும் ஆகு செலவைக் குறைக்கும் குறிக்கோளுடன் இந்த வருடம் விவசாயிகளிடமிருந்து கோதுடனான மரமுந்திரிகளைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக சிறிய அளவிலான செயன்முறைப்ப-டுத்துபவர்களிடமிருந்து 2.3 மெ.டொ. மரமுந்திரி பருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் காரணமாக போட்டி சந்தை விலை வரம்பொன்று உருவானது. இந்த வருடம் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற 157.81 மெ.டொ. அறுவடையும் கூட்டுத்தாபன தொழிற்சாலைகளில் பதப்படுத்தப்பட்டன.

3.3.2 மரமுந்திரி பதப்படுத்தல் கைத்தொழிற் துறையை வலுப்படுத்தல்

உயர் தரத்துடனான மரமுந்திரி உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிக விலையை ஈட்டுவதன் பொருட்டு உயர் உற்பத்தி பொறிமுறையொன்று அத்தியாவசியமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக மரமுந்திரி பதப்படுத்துபவர்களுக்கு உலர்த்தும் கருவிகள் மற்றும் மின் சக்தியால் இயங்கும் மரமுந்திரி வெட்டும் இயந்திரங்களை வழங்குதல், சிறந்த உற்பத்தி முறைகளின் பாவனை மூலம் (GMP) மற்றும் பெறுமதி சேர்த்தல் மற்றும் தர நிலைகள் தொடர்பில் மரமுந்திரி பதப்படுத்துபவர்களுக்குப் பயிற்சியளித்தல், பதப்படுத்தல் மன்றங்களுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல் மற்றும் சந்தை ஊக்குவிப்புக்கு உதவி வழங்கப்பட்டது.

3.3.3 மரமுந்திரி பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரிகை பதப்படுத்தல் நிலையங்கள், கம்பஹா மாவட்டத்தின் நெந்தகமுவ மற்றும் புத்தளம் பிரதேசங்களில் அமைந்துள்ளன. கூட்டுத்தாபன தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கோதுடனான மரமுந்திரிகள் பதப்படுத்தப்பட்டு

பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிப் பருப்புக்கள் கொள்ளுப்பிட்டி மற்றும் ராஜகிரியவில் அமைந்துள்ள 02 கூட்டுத்தாபன விற்பனை நிலையங்களுக் மேலதிகமாக நாட்டில் பரந்து காணப்படும் 55 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களைப் பயன்படுத்தி நுகர்வோருக்கு விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய தொழிநுட்ப முறைகளின் பாவனை, பெறுமதி சேர்த்தல் மற்றும் உயர் தர மரமுந்திரி உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் ரூ. 82.76 மில்லியன் தொகையை கூட்டுத்தாபனம் ஈட்டியது.

3.3.4 மரமுந்திரி உற்பத்தியை ஏற்றுமதி செய்தல் மற்றும் அந்நிய செலாவணியை ஈட்டுதல்

2019 ஆம் ஆண்டில் உயர் தரத்திலான பெறுமதி சேர்க்கப்பட்ட 47.40 மெ.டொ. மரமுந்திரிப் பருப்பை சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் ரூ. 93.57 மில்லியன் அந்நிய செலாவணியை இலங்கை ஈட்டியது. 2018 ஆம் ஆண்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட 60.81 மெ.டொ. மரமுந்திரிப் பருப்பை ஏற்றுமதி செய்வதன் மூலம் ரூ. 144.62 மில்லியன் அந்நிய செலாவணியை ஈட்டியுள்ளது. இதற்கமைய 2019 ஆம் ஆண்டில் ஏற்றுமதி திறன் மற்றும் அந்நிய செலாவணி வருமானமானது 2018 ஆம் ஆண்டை விடவும் வீழ்ச்சியடைந்திருப்பதைக் காட்டுவதோடு, சுற்றுலாத் துறையின் துரித வளர்ச்சியை அடுத்து மரமுந்திரி பருப்புக்கு உள்நாட்டு கேள்வி அதிகரித்ததோடு அதற்கமைய உள்நாட்டுப் பாவனையும் அதிகரித்துள்ளது.

3.3.5 கோதுடனான மரமுந்திரி இறக்குமதி

3.3.5.1 உள்நாட்டு நுகர்வுக்கான இறக்குமதி

உள்நாட்டு ரீதியில் மரமுந்திரி நுகர்வு அதிகரித்திருப்பதாலும் குறிப்பாக ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களில் சிறிய அளவிலான மரமுந்திரி பதப்படுத்துவோருக்குத் தேவையான கோதுடனான மரமுந்திரிக்கு உள்நாட்டு சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதற்கான ஒரு தீர்வாக சிறிய அளவிலான மரமுந்திரி பதப்படுத்துவோருக்கு வரிச் சலுகையின் கீழ் கோதுடனான மரமுந்திரியை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. இந்த இறக்குமதி அனுமதிப் பத்திரமானது தற்காலிக அடிப்படையில் உள்நாட்டு உற்பத்திச் சந்தையில்

தட்டுப்பாடு நிலவும் காலப் பகுதியில் மாத்திரம் வழங்கப்படும். இலங்கை சுங்க அறிக்கைகளின் படி கோதுடனான மரமுந்திரி 527.26 மெ.டொ. மற்றும் மரமுந்திரிப் பருப்பு 0.826 மெ.டொ. இறக்குமதி செய்யப்பட்டு சிறிய அளவிலான உற்பத்தியாளர்களினால் பெருமளவிலான பதப்படுத்துபவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதற்கமைய மரமுந்திரி பதப்படுத்தும் கைத்தொழிலில் ஈடுபடும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்குத் தலையீடு செய்யும் சந்தர்ப்பம் கூட்டுத்தாபனத்திற்குக் கிட்டியது.

3.4 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

தாவர இனப் பெருக்கம், பசளைகளின் பாவனை, மரமுந்திரி செய்கையின் நோய்கள் மற்றும் கிருமிகள் கட்டுப்பாடு, ஒட்டு செய்கையின் பல்வேறு தொழிநுட்ப முறைகளைப் பரீட்சித்துப் பார்த்தல், ஒட்டு மற்றும் விதை மரமுந்திரி செய்கை, நாற்றுக்களின் அடர்த்தி, அறுவடைக்குப் பின்னரான தொழிநுட்பம், அறுவடை மற்றும் உப பயிர் செய்கை தொடர்பான தொடர்ச்சியான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்டத்துறை முகாமைத்துவ பீடத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவக் குழு மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட்டது. விஸ்தரிப்பு சேவைகள் வலையமைப்பின் மூலம் ஆலோசனை சேவைகளை வழங்குகையிலும் அதே போன்று கள விளக்கங்கள், பிரசுரங்கள், வீடியோக்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஊடாக இந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இதன் கீழ் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மரமுந்திரி வர்த்தக நாற்று மேடைகளுக்கு பெச் ஒட்டு முறையைப் பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் நாலந்தை நாற்று மேடையில் 846 நாற்றுக்களின் ஒட்டு பணிகள் குறித்த ஒட்டு முறையில் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் 646 வெற்றியடைந்துள்ளதுடன், குறித்த நாற்றுக்கள் எளுவங்குளம் தோட்டத்தில் கட்டம் II இல் நடப்பட்டன.

4. நிர்வாக நடவடிக்கைகள்

சிறு மரமுந்திரி தோட்ட உரிமையாளர்கள், மரமுந்திரி பதப்படுத்தல் கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் நுகர்வோருக்குத் தரமான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கத்துடன் முறையான முகாமைத்துவ நடைமுறைகளைப் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. பொது தொழில் முயற்சியாக சேவைகள் வழங்கப்படுவதுடன், வருமானம் ஈட்டலும் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளமையால் கூட்டுத்தாபனத்தின் அனைத்துத் தரப்பினரதும் உதவியை இதன் பொருட்டு பெற்றுக் கொள்ள முடிந்தது.

இதன் பொருட்டு பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் மற்றும் உதவி பொது முகாமையாளர்கள் உள்ளடங்கலாக ஒட்டு மொத்த பணிக்குழுவினரதும் ஒத்துழைப்பு குறைவின்றி கிடைத்தது. அரசாங்கத்தின் புதிய அபிவிருத்தி உத்திகளுக்கு அமைவாக மக்களின் வருமான ஈட்டல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடையவும் இதற்கமைய செயற்பட முடிந்தது.

4.1 2019.12.31 ஆம் திகதியன்று பணிக்குழுவின் நிலை

அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழு				2019.12.31 ஆம் திகதியன்று பணிக்குழு
சிரேஷ்ட முகாமைத்துவ தரம்	(HM)	-	02	02
இடைநிலை முகாமைத்துவ தரம்	(MM)	-	07	05
கனிஷ்ட முகாமைத்துவ தரம்	(JM)	-	26	19
முகாமைத்துவ உதவியாளர்	(MA)	-	122	80
சிறு தரம்	(PL)	-	67	62
மொத்தம்		**-**	**224**	**168**

இதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் செயன்முறைப்படுத்தல் நிலையங்கள், தோட்டங்கள், தாவர இனப்பெருக்க நிலையங்கள் மற்றும் மத்திய நாற்று மேடைகளின் மாதாந்த தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஏறத்தாழ 200 செக்ரோல் தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

4.2 2019 ஆம் ஆண்டில் அடைந்த வெற்றிகள்

2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் அறிக்கையிடப்பட்ட விற்பனை நடவடிக்கைகள் மூலம் இலாபம் ஈட்டும் நிலைமையை 2019 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாகப் பேண முடிந்தது. இதற்குக் கூட்டுத்தாபனத்தின் வணிக செயற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதுடன், பணிப்பாளர் சபையின் விளைத்திறனான மற்றும் வினைத்திறனான வழிகாட்டல் மற்றும் பணிக்குழுவின் அர்ப்பணிப்பு இதற்குக் காரணியாக அமைந்தது.

வணிக செயற்பாடுகள் மூலம் 2019 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் ஈட்டிய தேறிய இலாபம் ரூ. 43.37 மில்லியனாகும். பின்வரும் தடைகள் காரணமாக அடையப் பெற்ற இலாபத்தை இதை விட மேலும் உயர் மட்டத்திற்குக் கொண்டு வர முடியாமற் போனது

- தேசிய கோதுடனான மரமுந்திரிக்குப் போதுமான வழங்கல் அறிக்கையிடப்படாத காரணத்தினால் மரமுந்திரி விலை அதிகரித்தல்.
- தொழிலாளர் செலவினம் மற்றும் உள்ளீட்டு செலவினம் அதிகரித்தல்.
- மீண்டுவரும் மற்றும் மூலதன மானியங்களை மட்டுப்படுத்துவதன் காரணமாக புதிய பணிகளை ஆரம்பிக்கையிலும் அதே போன்று அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றிக் கொள்கையிலும் தடைகள் ஏற்பட்டன. இதற்கமைய இந்தப் பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குக் கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நிதிகளையும் பயன்படுத்த நேரிட்டது. இதன் விளைவாக வணிக மற்றும் அபிவிருத்திப் பணிகளின் முதலீட்டிற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது.

5. பணிப்பாளர் சபை அறிக்கை

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்குக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை சார்பாக இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

பொது திறைசேரியின் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2003 ஜூன் மாதம் 02 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் பி.ஈ.டீ./12 இற்கு அமைய இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

5.1 ஆரம்பம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் கீழ் 60/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1973 மே மாதம் 25 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரம் மற்றும் அப்போதைய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் கட்டளைக்கு அமைய ரூ. 40 மி. ஆரம்ப மூலதனத்துடன் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது.

5.2 பெறுபேறுகள்

நடைமுறை வருடத்தில் நிதிசார் பெறுபேறுகள் மற்றும் உரிமைகள் மாற்றம் தொடர்பான தரவுகள் உரிமை மாற்றக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

5.3 வியாபார மீளாய்வு

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளதுடன், அது குறித்த மதிப்பீடு தவிசாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5.4 **சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

நிதிக் கூற்றில் நடைமுறை ஆண்டிற்கு அமைவாக சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் ஏற்பட்ட மாற்றங்களானது கணக்கு குறிப்பு இலக்கம் 1 மூலம் விளக்கப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பில் காட்டப்படும் பெறுமதிகள் அவற்றின் நடைமுறை சந்தைப் பெறுமதி மற்றும் பொருண்மையான மாற்றங்கள் இல்லை.

5.5 **இருப்புக்கள்**

உரிமை மாற்றக் கூற்றில் கூட்டுத்தாபனத்தின் மொத்த இருப்புக்களின் அமைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

5.6 **பணிப்பாளர் சபை**

(1). 2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரை பணிப்பாளர் சபையிலிருந்த உறுப்பினர்கள்

தொடரிலக்கம்	**பெயர்**	**பதவி**
01.	திரு.டீ.பீ.கருணாரத்ன	தவிசாளர் (2019.11.27 வரை)
02.	திரு.எம்.டப்ளியூ.எம்.பண்டாரதிலக்க	பிரதி தவிசாளர் (2019.11.27 வரை)
03.	திருமதி.அமந்தா கருணாதிலக்க	பணிப்பாளர் சபை உறுப்பினர் (பொது திறைசேரி பிரதிநிதி) 2019.03.06 முதல் 2019.11.27 வரை
04.	திரு.கே.எஸ். விஜயகீர்த்தி	பணிப்பாளர் சபை உறுப்பினர் (பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதி - 2019.11.27 வரை)
05.	திரு.ஜீ.ஏ.டீ.டப்ளியூ.தர்மசிறி	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.11.27 வரை)
06.	திரு.ஆர்.எம்.டீ.பி.டப்ளியூ.எம்.எம். பண்டார யட்டவர	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.11.27 வரை)
07.	திரு.டீ.டப்ளியூ.சீ.ஏ.ஆர்.சந்திரா	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.11.27 வரை)
08.	திரு.கீர்த்தி ஜயக்கொடி ஆரச்சி	பொது முகாமையாளர், (2019.03.14 வரை) பணிப்பாளர் சபை செயலாளர்
09.	திரு.பி.பீ.கொடிக்கார	பொது முகாமையாளர், (கடமைகளை மேற்கொள்ளல்) 2019.03.15 முதல் 2019.11.21 வரை பணிப்பாளர் சபை செயலாளர்

5.7 **கணக்காய்வுக் குழு**

அரச தொழில் முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு (Public Enterprises Guideline) அமைவாக கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு குழு தாபிக்கப்பட்டுள்ளது.

5.8 **நியதிச் சட்ட கொடுப்பனவுகள்**

அரசாங்கத்திற்கும் ஊழியர்களுக்கும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய அனைத்து நியதிச் சட்ட கொடுப்பனவுகளும் உரியவாறு செலுத்தப்பட்டுள்ளன.

5.9 **சூழல் பாதுகாப்பு**

சூழலுக்கு தீங்கை விளைவிக்கக் கூடிய எந்தவொரு செயற்பாட்டிலும் கூட்டுத்தாபனம் ஈடுபடவில்லை.

5.10 **நிதி நிலைமைக் கூற்று திகதிக்கு பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள்**

ஐந்தொகை திகதிக்குப் பின்னர் கணக்குகள் மூலம் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு எந்தவொரு சம்பவமும் அறிக்கையிடப்படவில்லை.

5.11 **கணக்காய்வாளர்கள்**

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்குரிய இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் அரச கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

பணிப்பாளர் சபையின் பணிப்பிற்கமைய,



பி.பீ.கொடிக்கார
பணிப்பாளர் சபை செயலாளர்

6. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

PED 31 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (2005.07.01 ஆம் திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை) அறிவுறுத்தல்களுக்கு அமைய மற்றும் குறித்த சுற்றறிக்கைக்கு அமைவாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டதுடன், அக் குழுவானது ஐந்து உறுப்பினர்களையும் கண்காணிப்பாளரொருவரையும் கொண்டமைந்த மொத்தம் 06 பேரைக் கொண்ட குழுவாக இருந்தது.

2019 ஆம் ஆண்டில் ஏற்புடைய குழுவின் தலைவராக பொது திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளரும், குழுவின் செயலாளராக இந்தக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரும் செயற்பட்டனர்.

ஏற்புடைய சுற்றறிக்கைகளின் பணிப்புரைகளுக்கு அமைய ஒரு வருட காலப்பகுதியில் குறைந்த பட்சம் 04 கூட்ட அமர்வுகளையேனும் நடாத்த வேண்டும் எனினும் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களை நியமிக்கையில் ஏற்பட்ட தாமதத்தின் பேரில் 2019 ஆம் ஆண்டைப் பொறுத்த வரை 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்த முடிந்ததோடு, குறித்த கூட்டத்திற்கு குழு உறுப்பினர்கள் மற்றும் கண்காணிப்பாளரின் பங்கேற்பு பின்வருமாறு.

தொடரிலக்கம்	பெயர்	பதவி	கூட்ட அமர்வுகள்
01.	திருமதி. அமந்தா கருணாதிலக்க	குழுத் தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - பொது திறைசேரி பிரதிநிதி (2019.05.17 முதல் 2019.11.27 வரை)	3/3
02.	திரு.ஜீ.எல். ரூபசிங்ஹ	குழு கண்காணிப்பாளர், கணக்காய்வு அத்தியட்சகர் (கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்), (2019.05.17 வரை)	3/3
03.	திரு.ஜீ.ஏ.டீ. டப்ளியூ.தர்மசிறி	குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.05.17 முதல் 2019.11.27 வரை)	3/3
04.	திரு.எம்.டீ.பி.டப்ளியூ.எம்.எம்.பீ.யட்டவர	குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (2019.05.17 முதல் 2019.11.27 வரை)	3/3
05.	திரு.பி.பீ. கொடிக்கார	குழு செயலாளர், பொது முகாமையாளர் (கடமைகளை மேற்கொள்ளல்) (2019.03.15 முதல் 2019.11.21 வரை)	3/3
06.	திரு.வீயூ. லியனகே	குழு உறுப்பினர், உதவி பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு	3/3

2019 ஆம் ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கு இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை அறிக்கை தொடர்பில் விரிவாக விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன், அதன் போது கூட்டுத்தாபனத்தின் நிலையான சொத்துக்களை கையகப்படுத்தலின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த அம்பாந்தோட்டை பிரதேச செயலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், குறித்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணியை, விளையாட்டு வளாகமொன்றை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் சிக்கலான நிலையொன்று தோன்றியிருப்பதால் அது தொடர்பில் குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களில் உள்ளடங்கியுள்ள அவதானிப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், புத்தளம் தோட்டத்தின் உப பயிர்செய்கை, நெந்தகமுவ செயன்முறைப்படுத்தல் நிலையத்தில் காணப்படும் பாவனைக்குப் பொருத்தமற்ற மோட்டார் சைக்கிள்களை அகற்றுதல், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள், மரமுந்திரிப் பருப்புக்களைப் பொதியிடும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் ஆளுகைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள அவதானிப்புக்கள் மற்றும் குறித்த அவதானிப்புக்களுக்கு அமைய ஆளுகைக் குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கைகள் தொடர்பில் குழுவினால் நீண்ட மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் போது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ராஜகிரிய விற்பனை நிலையத்தில் காணப்படும் நிதி மற்றும் மரமுந்திரி இருப்பு தொடர்பல் மேற்கொள்ளப்பட்ட பௌதிக சரிபார்ப்பு, கூட்டுத்தாபனத்தின் பணப் பெறுவனவுகள் மற்றும் பணக் கொடுப்பனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், 2018 ஆம் ஆண்டில் கமன்தலுவ தோட்டத்தின் தெங்கு உற்பத்தித் திறன், கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மரமுந்திரிப் பருப்பு விற்பனை போன்ற விடயங்கள் தொடர்பில் குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் 2019-2023 வருடங்களுக்கான மூலோபாயத் திட்டம், வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதன் முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டின் பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் கூட்டுத்தாபனத்தின் வணிக மற்றும் சேவை நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானமெடுத்தலை முறைப்படுத்துவதற்கு முக்கியமாகும் ஆவணங்கள் தொடர்பில், கண்டியில் புதிய மரமுந்திரி விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்தல், பூநகரி தோட்டத்தை மீளவும் கூட்டுத்தாபனத்திற்குக் கையகப்படுத்தல் மற்றும் எளுவங்குளம் விதை பூங்காவிங்கு அருகில் காணப்படும் தேசிய கால்நடை வள சபைக்குச் சொந்தமான காணியை கூட்டுத்தாபனத்திற்குக் கையகப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

2019 ஆம் ஆண்டு தொடர்பாக நடாத்தப்பட்ட இரண்டாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், கூட்டுத்தாபனத்தின் விதை பூங்கா அபிவிருத்தி மற்றும் கூட்டுத்தாபன தோட்டங்களின் பயிர்ச் செய்கை புனரமைப்பு தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இதன் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐய வினாக்களில் உள்ளடங்கியுள்ள அவதானிப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அதன் போது நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக மற்றும் உயிரியல் சொத்துக்களுக்கான கணக்கீடு எனும் தலைப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தி விரிவாக விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மூலம் ஆளுகைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களில் உள்ளடங்கியுள்ள அவதானிப்புக்களின் கீழ் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களிலிருந்து மற்றும் ஏனைய வர்த்தகக் கடன்படு நிறுவனங்களிலிருந்து கடன் தொகையை அறவிடுதல் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது. வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தலின் முன்னேற்றம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களிலிருந்து திரட்டப்பட்ட மரமுந்திரி அறுவடை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது 2018 ஆம் ஆண்டிற்கு நிதிச் சட்டத்தின் போது 13 (7) (ஓ) பிரிவு பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள கணக்காய்வுப் பந்திகளுக்கு கூட்டுத்தாபனத் தரப்பினர் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கை தொடர்பில் குழு கவனம் செலுத்தியது. அதன் போது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்காய்வு அவதானிப்புக்களையும் வெவ்வேறாக எடுத்து அவற்றில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஓய்வூதிய நன்கொடைக் கொடுப்பனவுகள், புத்தளம் செயன்முறைப்படுத்தல் நிலையத்தில் காணப்படும் கொதிகலனை அகற்றுதல் தொடர்பில் மற்றும் எளுவங்குளம் விதை பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கதிரடிக்கும் களம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய வரைவு பதில் அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் எவ்வித திருத்தங்களும் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் ஏற்புடைய வரைவு அறிக்கையானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை குறித்த விரிவான அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள்ள கூட்டுத்தாபனத்தின் விற்பனை மேம்பாடு, ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி கலந்துரையாடப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த 05 மாத காலப்பகுதிக்குக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் பிரிவின் வருமானக் கூற்று தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் ஆளுகைக் குழுவிடம் வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பில் விரிவாக விடயங்கள் கல்நதுரையாடப்பட்டன. கூட்டு தாபனத்தின் வருமான நிலையை அதிகரிப்பதற்குத் தோட்டங்களில் பிரதான பயிரான மரமுந்திரிக்கு மேலதிகமாக உப பயிர்களைப் பயிரிடல் தொடர்பில் மேலும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அமந்தா கருணாதிலக்க
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

7. 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை

7.1 மரமுந்திரி செய்கைக்கான மானியத் திட்டம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

திறைசேரி ஏற்பாடுகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மரமுந்திரி செய்கைக்கான மானியத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 2,681 ஏக்கர் ஒட்டு மரமுந்திரி, 1,819 ஏக்கர் விதை மரமுந்திரி என்றவாறு 19 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் மொத்தமாக 4,500 ஏக்கர் பயிரிடப்பட்டுள்ளது. 11,069 விவசாயக் குடும்பங்களுக்கு இதன் மூலம் நன்மைகள் கிட்டின. 2019 ஆம் ஆண்டில் இந்த மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பாக வீட்டுத் தோட்டச் செய்கைக்கும் நாற்றுக்கள் வழங்கப்பட்டன. இதன் பொருட்டு 30.99 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

7.2 பயிர்ச் செய்கையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்

7.2.1 நடுகைப் பொருட்களின் உற்பத்தி

வெவ்வேறு பிரதேசங்களுக்கு உகந்த புதிய வகைகளை இனப்பெருக்கம் செய்து சிறிய அளவிலான மரமுந்திரி நில உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு மாத்தளை மாவட்டத்தின் நாலந்தை, அனுராதபுர மாவட்டத்தின் விலச்சிய, அம்பாறை மாவட்டத்தின் மஹஓய, மட்டக்களப்பு மாவட்டத்தின் மாங்கேணி, மன்னார் மாவட்டத்தின் கொண்டாச்சி மற்றும் மொணராகலை மாவட்டத்தின் சுதுவத்துர ஆர போன்ற தாவர இனப்பெருக்க நிலையங்கள் பராமரிக்கப்பட்டன. விஸ்தரிப்பு சேவைகள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒட்டு கன்றுகள் உற்பத்திக்குத் தேவையான உயர் தரத்திடனான 500,000 தாய் விதைகள் மற்றும் 310,000 தளிர்களும் இதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதன் பொருட்டு செலவிடப்பட்ட மொத்த தொகை ரூ. 14.69 மி. ஆகும்.

7.2.2 உற்பத்தியை மேம்படுத்தல்

மரமுந்திரி செய்கையின் நோய்கள் மற்றும் கிருமிகள் கட்டுப்பாடு மற்றும் சிறந்த விவசாய முறைகளின் பாவனை மூலம் (GAP) உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் “ஹெலோபெல்டீஸ்” பூச்சியின் சேதம் மற்றும் தண்டு மற்றும் வேரை

அரிக்கும் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்குக் கிருமிகள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் அனுசரணையில் சிறந்த விவசாய முறைகளின் பாவனை மற்றும் மரமுந்திரி செய்கையின் கிருமிகள் கட்டுப்பாடு தொடர்பான 19 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் 950 விவசாயிகள் பங்குபற்றினர். இதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை ரூ. 1.89 மி. ஆகும்.

7.2.3 நாற்று மேடை முகாமைத்துவம்

கூட்டுத்தாபனத்தின் 07 மத்திய நாற்று மேடைகள் கமன்தளுவ தோட்டம், அளுத்தரம, ஹாடி, மிஹிந்தலை, சந்திரிக்காவெவ, தம்புள்ளை மற்றும் கும்புக்கனையில் அமைந்துள்ளன. நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி ஒட்டுக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட 06 பொலிநெட் வீடுகள் கமன்தளுவ, மிஹிந்தலை, மட்டக்களப்பு, அளுத்தரம நாற்று மெடைகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ,ந்த நாற்று மேடைகளில் 2019 பெரும் போகத்திற்கு உயர் தரத்திலான ஒட்டு கன்றுகள் 270,294 உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

7.2.4 அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு கன்றுகளை வழங்குதல்

2019 ஆம் ஆண்டில் ஆரம்ப நடவடிக்கைகள் அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் 14,000 விதை மரமுந்திரி கன்றுகள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி அலுவலகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டத்திற்கு 50,000 கன்றுகள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் விவசாயிகளுக்கு 1,160 ஒட்டு மரமுந்திரி கன்றுகளும் 2018 ஆம் அண்டில் 4,080 வெற்று நாற்றுக்களும் என்றவாறு மொத்தமாக 5,240 கன்றுகள் வழங்கப்பட்டன.

7.3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்டத்துறை முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தாவர இனப் பெருக்கம், பசளை பாவனை, தாவர அடர்த்தி, மரமுந்திரி செய்கையின் நோய்கள் மற்றும் கிருமிகள் கட்டுப்பாடு, உப பயிர்களின் செய்கை, ஒட்டு மற்றும் விதை செய்கைகள், ஒட்டு தொழிநுட்ப முறைகள், அறுவடை குறித்து ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஏற்புடைய ஆராய்ச்சி பெறுபேறுகள் தொடர்பில் செயலமர்வுகள் மற்றும் விஸ்தரிப்பு சேவைகள் மூலம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மரமுந்திரி வணிக நாற்று மேடைகளுக்கு பெச் ஒட்டு முறை குறித்த பரீட்சார்த்த பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், அவ்வாறு ஒட்டுதல் செய்யப்பட்ட கன்றுகளை எளுவங்குளம் தோட்டத்தில் நடுவதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை ரூ. 2.96 மி. ஆகும்.

7.4 கூட்டுத்தாபன தோட்டங்களில் புதிய பயிர்ச் செய்கை மற்றும் பயிர்ச் செய்கை மறுசீரமைப்பு

2019 ஆம் ஆண்டில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் எளுவன்குளம் விதை பூங்காவிற்கு அருகில் காணப்பட்ட தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான 441 ஏக்கர் அளவிலான காணியானது எளுவன்குளம் கட்டம் - II என கூட்டுத்தாபனத்தின் உடைமையாகக் கையகப்படுத்தப்பட்டதுடன், குறித்த காணியில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய மரமுந்திரி வகைகளின் கன்றுகள் நடப்பட்டன. அதே போன்று எளுவங்குளம் தோட்டப்புறத்தில் கட்டம் - I இல் 7.5 எக்கரில் புதிய செய்கையின் கீழ் கன்றுகள் நடப்பட்டுள்ளன. மாங்கேணி தோட்டத்தில் கட்டம் - II இல் 25 ஏக்கர் நிலப் பரப்பில் புதிய பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கொண்டாச்சி தோட்டத்தில் 5000 வெற்று நாற்றுக்களும் மஹஒய விதை பூங்காவில் 450 வெற்று நாற்றுக்களும் புத்தளம் தோட்டத்தில் 3,750 வெற்று நாற்றுக்களும் என்றவாறு வெற்று நாற்றுக்கள் நடப்பட்டன.

தோட்டங்களிலிருந்து 157.81 மெ.டொ. கோதுடனான மரமுந்திரி அறுவடை கிடைத்தது. இதற்கு மேலதிகமாக உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் பொருட்டு இரசாயனப் பசளையைப் பயன்படுத்தல், களை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், நோய்கள் மற்றும் பூச்சிகள் கட்டுப்பாடு, வயல்வெளி வீதிகளை பராமரித்தல் மற்றும் கத்தரித்தல் நடவடிக்கைகள் சிறந்த விவசாய முறைகளுக்கு அமைவாக

மேற்கொள்ளப்பட்டன. இதன் பொருட்டு செலவான மொத்தத் தொகை ரூ. 6.07 மி. ஆகும்.

7.5 பின் அறுவடை தொழிநுட்பம்

7.5.1 சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல் கைத்தொழில் மேம்பாடு

கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கோதுடனான மரமுந்திரி அறுவடை மற்றும் சிறுய அளவிலான பதப்படுத்துபவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மரமுந்திரிப் பருப்புக்கள் புத்தளம் மற்றும் நெந்தகமுவவில் அமைந்துள்ள செயன்முறைப்படுத்தல் நிலையங்களில் பதப்படுத்தப்பட்டன. அவை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக கூட்டுத்தாபனத்தின் பிரதான விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. இதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட 54 விற்பனை நிலையங்களைக் கொண்ட கூட்டுத்தாபன விற்பனை நிலைய வலையமைப்பொன்று பயன்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் விற்பனை நடவடிக்கைகள் மூலம் கூட்டுத்தாபனம் ஈட்டிய மொத்த வருமானம் ரூ. 79.08 மி. ஆகும்.

7.5.1.1 மனித வள அபிவிருத்தி

பணிக்குழுவின் அனைத்துப் பதவிகளினதும் உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான பணியிடைப் பயிற்சி அமர்வுகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் பணி உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் அவர்களது விடய அறிவை இற்றைப்படுத்துவதற்கும், புதிய அறிவைப பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டதோடு, சுய உந்துதல் மூலம் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு வாய்ப்பு கிட்டியது. 2019 ஆம் ஆண்டில் ஊழியர்களின் ஆற்றல் மற்றும் தொழில்சார் தரநிலைகளை விருத்தி செய்வதற்குத் தேவையான தொழில்சார் பயிற்சி மற்றும் வழிகாட்டலின் கீழ் கூட்டுத்தாபன பணிக்குழுவின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், தரத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் மற்றும் பெருந்தோட்ட உத்தியோகத்தர்கள் இருவர் சீனாவில் மேற்கொள்ளப்பட்ட பாடநெறியொன்றில் பங்குபற்றினர். இதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை ரூ. 0.025 மி. ஆகும்.

8. இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதன் பொருட்டு மேற்கொள்ள உத்தேசித்துள்ள இடைக்கால நடவடிக்கைகள்

செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காகக் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதானமான இடைக்கால நடவடிக்கைகள் சில பின்வருமாறு.

01. இலங்கையில் மரமுந்திரிகை செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்புக்களின் விஸ்தீரணத்தை அதிகரித்தல்

02. மரமுந்திரிகை செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

03. மரமுந்திரிகை செய்கையின் பின் அறுவடை தொழிநுட்பத்தை மேம்படுத்தல்

04. மனித வள அபிவிருத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

8.1 இலங்கையில் மரமுந்திரிகை செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்புக்களின் விஸ்தீரணத்தை அதிகரித்தல்

8.1.1 விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மரமுந்திரி செய்கை

இலங்கையில் மரமுந்திரி செய்கையானது பிரதானமாக உலர் காலநிலை கொண்ட வலயத்தில் பரவலாகக் காணப்படுகிறது. கடந்த 03 தசாப்த காலமாக நிலவிய யுத்த சூழல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் அமைந்துள்ள மரமுந்திரி செய்கை மேற்கொள்ளப்படும் ஏறத்தாழ 30,000 ஏக்கர் பரப்பிலான நிலங்கள் அழிவடைந்தன. எனினும், 2010 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வருடமொன்றிற்கு 7,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு மரமுந்திரி செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டது.

திறைசேரி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விஸ்தரிப்பு மானியத் திட்டத்தின் கீழ் ஒட்டு மற்றும் விதை மரமுந்திரிகை செய்கையை 3,500 ஏக்கர் வீதம் எதிர்வரும் 03 வருடங்களினுள் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு,

வீட்டுத் தோட்டச் செய்கையின் கீழ் வருடமொன்றிற்கு ஏறத்தாழ 1,000 ஏக்கர் அளவில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

8.1.2 பயிர்ச் செய்கை மறுசீரமைப்பு

கூட்டுத்தாபன தோட்டங்களில் புதிய பயிர்ச் செய்கை மற்றும் பழைய பயிர்ச் செய்கை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. இதன் கீழ் வட மாகாணத்தின் கொண்டாச்சி தோட்டம், கிழக்கு மாகாணத்தின் மாங்கேணி தோட்டம் ஆகியவற்றின் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ள்ப்பட்டு வருகின்றன. தற்போது கொண்டாச்சி தோட்டத்தில் ஏறத்தாழ 1,500 ஏக்கர் நிலப்பரப்பு சிவில் பாதுகாப்பு துணைக்களத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்பட்டதோடு, ஏறத்தாழ 500 ஏக்கர் அளவில் கூட்டுத்தாபனத்தின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாச்சி தோட்டத்தின் எஞ்சிய 4,000 ஏக்கரில் சிவில் பாதுகாப்பு துணைக்களத்துடன் இணைந்து பயிர்ச் செய்கையை மேற்கொள்ளத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

8.1.3 புதிய பயிர்ச் செய்கை

தனியார், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நில உரிமையாளர்களுக்குச் சொந்தமான மரமுந்திரி செய்கைகளில் புதிய பயிர்ச் செய்கையும் வருடாந்தம் 500 ஏக்கரில் மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்வரும் மூன்று வருடங்களில் இந்த பயிர்ச் செய்கையானது தொடர்ந்தும் பேணப்படும். மேற்குறித்த அனைத்து பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் குறைந்த பட்சம் வருடாந்தம் 7,000 ஏக்கர் வீதம் மரமுந்திரி செய்கையின் நிலப்பரப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதன் பொருட்டு 10 பிரதேச செயலகங்களைக் கொண்ட விஸ்தரிப்பு சேவைகள் வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படுவதுடன், 19 மாவட்டங்களில் மரமுந்திரி செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகள் இதன் மூலம் உள்ளடக்கப்படும்.

8.1.4 அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு மரமுந்திரிக் கன்றுகளை வழங்குதல்

2019 ஆம் ஆண்டில் முதன்மை விவகார அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் 14,000 விதை மரமுந்திரி கன்றுகள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி அலுவலகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டத்திற்கு 50,000 கன்றுகள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் விவசாயிகளுக்கு 1,160 ஒட்டு மரமுந்திரி கன்றுகளும் 2018 ஆம் ஆண்டில் 4,080 வெற்று நாற்றுக்களும் என்றவாறு மொத்தமாக 5,240 கன்றுகள் வழங்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் அடிப்படையில் **முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, அனுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் மரமுந்திரிகை செய்கை ஏற்றுமதியை இலக்காகக்** கொண்ட கொத்தணி கிராமங்களாக அபிவிருத்தி செய்யும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதோடு, இதன் மூலம் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு 100,000 மரமுந்திரி கன்றுகளை வழங்குவதற்கும், 1,000 விவசாயக் குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூக மட்டத்தை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான அபிவிருத்திக் கருத்திட்டங்களை எதிர்வரும் ஆண்டுகளிலும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மரமுந்திரி செய்கையை விஸ்தரித்தலானது இதன் அடிப்படை நோக்கமாகும்.

8.2 மரமுந்திரி செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்

இலங்கையில் மரமுந்திரி செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பின் விஸ்தீரணம் ஏறத்தாழ 164,108 ஏக்கர் ஆவதோடு, அதன் 88% ஆனோர் சிறிய அளவிலான நில உரிமையாளர்களாவர். பெரும்பாலான நிலங்களில் விதை மரமுந்திரி மரங்கள் பயிரிடப்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களைப் போன்றே இந்த நிலங்களில் காணப்படும் மரமுந்திரி மரங்களின் வயது ஏறத்தாழ 20-35 வருடங்கள் ஆகும் என்பதோடு, ஒரு மரத்திலிருந்து 3-5 கிலோ கிராம் வரை கோதுடனான

மரமுந்திரி கிடைக்கிறது. மேம்படுத்தப்பட்ட புதிய மரமுந்திரி வகைகளுடனான மரமுந்திரி செய்கைகளைக் கொண்ட வியட்நாம், இந்தியா போன்ற நாடுகளில் மரமொன்றிலிருந்து 10-15 கிலோ கிராம் வரையான அறுவடை கிடைக்கிறது. இதற்கமைய பயிர்ச் செய்கையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்குக் கூட்டுத்தாபனத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன,

8.2.1 புதிய வகைகளை அறிமுகப்படுத்தல்

இதற்கமைய அதிக அறுவடையைத் தரும் மேம்படுத்தப்பட்ட 08 புதிய வகைகள் கூட்டுத்தாபனத்தினால் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன், WUCC 1, WUCC 5, WUCC 8,WUCC 9, WUCC 13, WUCC 19, WUCC 21, WUCC 23 போன்ற 08 வகைகள் எளுவங்குளம், விலச்சிய, நாலந்தை, மஹஓய, சுதுவத்துர ஆர மற்றும் ஒயாமடுவ போன்ற தோட்டங்கள் மற்றும் தாவர இனப் பெருக்க நிலையங்களில் பயிரிடப்பட்டுள்ளன. இந்தத் தாய் தாவரங்களிலிருந்து தளிர்களைப் பெற்றுக் கொண்டு நாட்டின் பல்வேறு காலநிலைகளுடனான வலயங்களுக்குப் பொருத்தமான புதிய வகைகளை இனப்பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
(Wayamba University Cashew Corporation – WUCC)

வருடாந்தம் 02 புதிய வகைகள் வீதம் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இதன் மூலம் ஒரு ஹெக்டருக்குக் கிடைக்கும் அறுவடையை 1,000 கிலோ கிராம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

8.2.2 சிறந்த விவசாய முறைகளின் பாவனை

மிகக் குறைந்த அறுவடையைத் தரும் விதை மரமுந்திரி மரங்களை அகற்றி மீளவும் பயிரச் செய்கையை மேற்கொள்வதற்கு சிறிய அளவிலான நில உரிமையாளர்கள் வருடாந்தம் ஈடுபடுத்தப்படுகின்றனர். சிறந்த விவசாய முறைகளின் பாவனை மூலம் (GAP) மரமுந்திரி செய்கையின் அறுவடை உற்பத்தித் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பங்கேற்புடன் விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கும்

நிகழ்ச்சித் திட்டங்கள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை எதிர் வரும் மூன்று வருடங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்புல ஊடகம் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மரமுந்திரி மரங்கள் பூக்கும் காலத்தில் அதிக மழை வீழ்ச்சி காணப்படுவதனால் தளிர்களை அழிக்கும் நோய் பரவுகிறது.

இதன் காரணமாக மரமுந்திரி அறுவடையானது 30% - 40% இற்கு இடையிலான அளவில் குறைவடைந்துள்ளது. இதன் பொருட்டு சிறிய அளவிலான நில உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுவது அத்தியாவசியமாகியுள்ளது. முதிர்ந்த மரமுந்திரி மரங்களில் காணப்படும் வெட்டுப்புழு தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஆராய்ச்சிப் பிரிவுடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இது எதிர் வரும் மூன்று வருடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

8.2.3 மத்திய நாற்று மேடைகள்

கூட்டுத்தாபனத்தின் மத்திய நாற்று மேடைகள் மிஹிந்தலை, தம்புள்ளை, கமன்தளுவ தோட்டம், அளுத்தரம, கும்புக்கன, ஹாடி தோட்டம் மற்றும் சந்திரிக்கா வெவ போன்ற இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த நாற்று மேடைகள் மூலம் புதிய வகைகளைக் கொண்ட உயர் தரத்துடனான ஒட்டு கன்றுகள் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. வருடாந்தம் ஏறத்தாழ 300,000 ஒட்டு கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், எதிர்வரும் 03 வருடங்களில் வருடமொன்றிற்கு 300,000 கன்றுகள் வீதம் உற்பத்தி செய்தலை நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. கன்று உற்பத்தியின் போது புதிய தொழிநுட்ப பாவனை மேம்படுத்தப்படும்.

8.3 மரமுந்திரி செய்கையின் பின் அறுவடை தொழிநுட்பத்தை மேம்படுத்தல்

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மரமுந்திரிப் பருப்புக்களின் சுவை, அளவு மற்றும் அதன் நிறம் காரணமாக உலக சந்தையில் அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது. எனினும், வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் ஏறத்தாழ 10,000 - 12,000 மெ.டொ. அளவிலான கோதுடனான மரமுந்திரி அறுவடை மூலம் இந்த ஏற்றுமதித் திறனை

உடனடியாக அதிகரிப்பது கடினமாகவுள்ளது. உள்நாட்டு மரமுந்திரிப் பருப்பு நுகர்வும் அதிகரித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக மரமுந்திரிப் பருப்பு ஒரு கிலோ கிராமின் உற்பத்திச் செலவினம் அதிகரித்துள்ளமையால் ஒரு கிலோ மரமுந்திரிப் பருப்பின் விலை ரூ. 2,800/- இற்கும் ரூ. 3,800/- இற்கும் இடையில் காணப்படுகிறது. இந்த விடயங்களைக் கவனத்திற் கொண்டு மரமுந்திரிப் பருப்பு உற்பத்திகளின் தரம் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்குக் கூட்டுத்தாபனத்தினால் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

8.3.1 சிறந்த உற்பத்தி முறைகளின் பாவனை

கூட்டுத்தாபனத்தினால் சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு தரப்படுத்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் சிறந்த உற்பத்தி முறைகளின் (Good Manufacturing Practices) பாவனை மூலம் உற்பத்திகளின் தரத்தை உயர்த்தல், சுகாதாரமான உற்பத்தி முறைகளின் பாவனை, புதிய தொழிநுட்பத்துடனான பதப்படுத்தல் செயன்முறையை நவீனமயப்படுத்தல், குறைந்த செலவிலான உலர்த்தும் இயந்திரங்களைப் பயன்படுத்தல் மற்றும் புதிய பொதியிடல் முறைகள் மற்றும் புதிய உற்பத்திகளுக்கு தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பொருட்டு நெந்தகமுவ செயன்முறைப்படுத்தல் நிலையத்தின் பயிற்சி நிலையம் பயன்படுத்தப்படுகிறது.

8.3.2 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

சிறிய அளவிலான உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சர்வதேச தர நிலைகள் வரை உயர்த்துவதற்குக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு வழங்கப்பட்டதுடன், வருடாந்தம் பதப்படுத்தல் கைத்தொழிலில் ஈடுபடும் 50 பேருக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 03 வருடங்களுக்குத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும்.

பதப்படுத்தல் கைத்தொழிலை ஆரம்பிப்பவர்களுக்குத் தேவையான மின் சக்தியால் இயக்கப்படும் வெட்டும் இயந்திரங்கள் (Shelling Machine) மற்றும் உலர்த்தும் இயந்திரங்களைக் (Ovens) கூட்டுத்தாபனத்தின் தலையீட்டில் சலுகை விலையில்

வழங்கும் நிகழ்ச்சித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும்.

8.3.3 சிறிய அளவிலான பதப்படுத்துபவர்களிடமிருந்து மரமுந்திரிப் பருப்புக்களைக் கொள்வனவு செய்தல்

கூட்டுத்தாபன தோட்டங்களிலிருந்து கிடைக்கப் பெறும் கோதுடனான மரமுந்திரி அறுவடைக்கு மேலதிகமாகப் பதப்படுத்தல் தொழிற்சாலைகளில் தொடர்ச்சியாக வருடாந்த உற்பத்தியை மேற்கொள்வதற்குத் தேவையான மரமுந்திரிப் பருப்புக்கள் கடந்த வருடங்களில் சிறிய அளவிலான பதப்படுத்துபவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. சந்தையின் போட்டி நிலைகளுக்கு முகங் கொடுத்தல் மற்றும் ஆகு செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் விவசாயிகளிடமிருந்து கோதுடனான மரமுந்திரியைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக சிறிய அளவிலான பதப்படுத்துபவர்களிடமிருந்து மரமுந்திரிப் பருப்புக்களைக் கொள்வனவு செய்யப்பட்டது. எதிர்வரும் 03 ஆண்டுகளிலும் சிறிய அளவிலான பதப்படுத்துபவர்களிடமிருந்து மரமுந்திரிப் பருப்புக்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8.3.4 மரமுந்திரி உப உற்பத்திகளை மேம்படுத்தல்

மரமுந்திரி அறுவடை மூலம் பிரதானமாகக் கோதுடனான மரமுந்திரிகள் வேறுபடுத்தப்படுவதுடன், மரமுந்திரிப் பழங்கள் பயன்படுத்தப்படாது விரயமாகின்றன. இதற்கமைய வருடாந்தம் 120,000 மெ.டொ. இற்கும் அதிகமான அளவிலான மரமுந்திரிப் பழங்கள் பயன்படுத்தப்படாது அழிவடைகின்றன. இந்த மரமுந்திரிப் பழங்களைப் பயன்படுத்தி Non Alcoholic Beverages, பழப்பாகு மற்றும் பழச்சாறு போன்ற உப உற்பத்திகள் தொடர்பில் ஆராய்தல், பயிற்சி அளித்தல் மற்றும் தனியார் துறையுடன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கு மேலதிகமாக மரமுந்திரிப் பழங்கள் மூலம் வைன் மற்றும் ஸ்பிரிட் உற்பத்தி செய்வதற்கும் கருத்திட்ட முன்மொழிவொன்று வகுக்கப்பட்டு வருவதுடன், எதிர்வரும் வருடங்களில் இந்தக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

8.4 மனித வள அபிவிருத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்

8.4.1 மனித வளப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

பணிக்குழுவின் அனைத்துப் பதவிகளினதும் உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான பணியிடைப் பயிற்சி அமர்வுகளை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பணியின் விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் அவர்களது விடய அறிவை இற்றைப்படுத்துவதற்கும் புதிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு கிட்டுவதோடு, சுய உந்துதல் மூலம் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் கிட்டும். இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்வரும் 03 வருடங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

8.4.2 பணிக்குழு கட்டமைப்பு மறுசீரமைத்தல் மற்றும் செலாற்றுகை மதிப்பீடு

கூட்டுத்தாபனத்தின் பிரதேச செயலக வலையமைப்பிற்குக் கணனிகள் மற்றும் தொலைநகல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய வலையமைப்பு வசதிகளுடன் தொடர்பாடல் நடவடிக்கைகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. நடைமுறை அபிவிருத்தி செயன்முறைக்கு ஏற்றவாறு கூட்டுத்தாபனத்தின் பணிக்குழுக் கட்டமைப்பின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கமைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்களைத் திருத்தம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பணிக்குழுக் கட்டமைப்பினுள் செயற்திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை அம்சங்களுடன் கூட்டுத்தாபனத்தின் எதிர்வரும் சில வருடங்களில் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு இந்தக் கட்டமைப்புசார் மாற்றங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அனைத்து நிலைகளினதும் செலாற்றுகையை மதிப்பிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

9. செயலாற்றுகை குறித்த 05 வருட பொழிப்பு

தொடரிலக்கம்	விபரம்	2019	2018	2017	2016	2015
01.	மானியத் திட்டத்தின் கீழ் மரமுந்திரி பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் ஏக்கர் அளவு	மானிய நிகழ்ச்சித் திட்டம் 3,305 வீட்டுத் தோட்டச் செய்கை 1,195 **மொத்தம் 4,500**	மானிய நிகழ்ச்சித் திட்டம் 3,305 வீட்டுத் தோட்டச் செய்கை 1,195 **மொத்தம் 4,500**	4,500	4,500	4,500
02.	மானியத் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை	11,069	11,818	14,932	3,298	3,750
03.	உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை	ஒட்டுக் கன்றுகள் 270,294 விதைக் கன்றுகள் 79,945 **மொத்தம் 350,239**	ஒட்டுக் கன்றுகள் 197,353 விதைக் கன்றுகள் 80,007 **மொத்தம் 277,360**	ஒட்டுக் கன்றுகள் 328,456 விதைக் கன்றுகள் 105,480 **மொத்தம் 433,936**	ஒட்டுக் கன்றுகள் 209,125 விதைக் கன்றுகள் 78,500 **மொத்தம் 287,625**	ஒட்டுக் கன்றுகள் 218,373 விதைக் கன்றுகள் 80,000 **மொத்தம் 298,373**
04.	திரட்டப்பட்ட தாய் விதைகளின் எண்ணிக்கை	500,000	484,753	560,000	330,103	600,000
05.	திரட்டப்பட்ட தளிர்களின் எண்ணிக்கை	310,000	164,500	200,000	264,000	310,000

தொடரிலக்கம்	விபரம்	2019	2018	2017	2016	2015
06.	பெற்றுக் கொண்ட அறுவடை (மெ.டொ.)	157.81	83.52	66.4	109	106
07.	கூட்டுத்தாபனத் தோட்டங்களில் புதிய பயிர்ச் செய்கை (ஏக்கர்)	52.5	65.0	433	116.25	250
08.	அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை	55	60	56	51	39
09.	தொழிநுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், கிருமிகள் கட்டுப்பாடு மற்றும் பின் அறுவடைத் தொழிநுட்பத்தின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	166	139	197	168	126
10.	பயிற்சி அளிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை	1369	2320	3574	1833	2200
11.	இறக்குமதி செய்யப்பட்ட மரமுந்திரி அளவு (மெ.டொ.)	கோதுடனான மரமுந்திரி 549.2 முந்திரிப் பருப்பு 0.025	கோதுடனான மரமுந்திரி 527.26 முந்திரிப் பருப்பு 0.826	கோதுடனான மரமுந்திரி 2,108.22 முந்திரிப் பருப்பு 160.82	கோதுடனான மரமுந்திரி 1,622 முந்திரிப் பருப்பு 263	கோதுடனான மரமுந்திரி 2,490 முந்திரிப் பருப்பு 565
12.	மரமுந்திரி இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட மெ.டொ.அளவு	500	-	6,000	2,910	2,900

தொடரிலக்கம்	விபரம்	2019	2018	2017	2016	2015
13.	மரமுந்திரி ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு மெ.டொ.	34.32	47.40	59.04	57.64	105.66
14.	மரமுந்திரி ஏற்றுமதி செய்யப்பட்ட பெறுமதி (ரூ.மி.)	81.13	93.57	143.51	99.98	174.06
15.	கோதுடனான மரமுந்திரி மற்றும் முந்திரிப் பருப்பு கொள்வனவு செய்தல் (மெ.டொ.)	கோதுடனான மரமுந்திரி 64.0 முந்திரிப் பருப்பு -	கோதுடனான மரமுந்திரி 20.00 முந்திரிப் பருப்பு 2.30	கோதுடனான மரமுந்திரி 63.48 முந்திரிப் பருப்பு 4.8	கோதுடனான மரமுந்திரி 21 முந்திரிப் பருப்பு 19.97	கோதுடனான மரமுந்திரி 2,108.22 முந்திரிப் பருப்பு 160.82
16.	பெறுமதி சேர்க்கப்பட்ட முந்திரிப் பருப்பு விற்பனை செய்யப்பட்ட அளவு (மெ.டொ.)	16.91	21.72	27.80	30.94	27.80
17.	பெறுமதி சேர்க்கப்பட்ட முந்திரிப் பருப்பு விற்பனை செய்யப்பட்ட பெறுமதி (ரூ.மி.)	47.23	79.08	87.96	84.59	66.65

10. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள்

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

30.12.2018 **2019.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று**

ரூ.	சொத்துக்கள்	குறிப்புக்கள்	ரூ.	ரூ.
	நடைமுறை அல்லாச் சொத்துக்கள்			
87,369,187.30	சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	01	82,027,363.09	
27,435,768.06	விளைச்சல் தரும் பயிர்ச் செய்கை பராமரிப்பு	02	34,269,747.25	
51,590,840.93	விளைச்சல் தராத பயிர்ச் செய்கை பராமரிப்பு	03	37,862,098.17	
522,874.09	ஏனைய சிறிய கருத்திட்டங்கள்	04	675,024.09	
-	மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகள் - மூலதனம்		69,112.00	
166,918,670.38	**மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்**			154,903,344.60
	நடைமுறைச் சொத்துக்கள்			
20,222,792.62	இருப்பு	05	38,263,952.42	
17,483,950.28	வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய பெறுவனவுகள்	06	21,206,993.81	
2,552,926.53	வைப்பு முற்பணங்கள் மற்றும் முற் கொடுப்பனவுகள்	07	6,092,927.07	
3,224,807.73	காசு மற்றும் காசுக்கு சமனானவை	08	5,201,996.60	
43,484,477.16	**மொத்த நடைமுறைச் சொத்துக்கள்**			70,765,869.90
210,403,147.54	**மொத்தச் சொத்துக்கள்**			**225,669,214.50**
	உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்			
	உரிமைகள்			
40,000,000.00	ஆரம்ப மூலதனம்		40,000,000.00	
175,414,265.06	அரச மானியம்		202,788,511.45	
17,755,767.32	ஏனைய தரப்புக்களின் மானியம்	09	15,766,347.27	
17,441,846.85	மூலதன ஒதுக்கம்	10	17,441,846.85	
(110,011,179.38)	இலாப நட்டக் கணக்கு		(141,197,261.12)	
140,600,699.85	**மொத்த உரிமைகள்**			134,799,444.45
	நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
27,703,878.00	பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடுகள்		35,045,966.00	
3,500,000.00	நீண்ட காலக் கடன்	11	3,500,000.00	
31,203,878.00	**மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்**		38,545,966.00	
	நடைமுறைப் பொறுப்புக்கள்			
38,598,569.69	வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	12	52,323,804.05	
38,598,569.69	**மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்**			90,869,770.05
210,403,147.54	**மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்**			**225,669,214.50**

ஆர்.ஏ.எஸ்.கே. ரத்நாயக்க **தவிசாளர்**	**அசோக்கா லங்காதிலக்க** **பிரதி தவிசாளர்**	**கே.எஸ். விஜயகீர்த்தி** **பொது முகாமையாளர் (ப.க)**	**எம்.ரீ.எஸ்.கே. பீரிஸ்** **பிரதி பொது முகாமையாளர் (நிதி)**

10.1 அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் - 2019

01. பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

02. நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு நேர்கோட்டு முறையில் கணிப்பிடப்பட்டுள்ளது. வருடத்தினுள் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டுள்ளது. வருடத்தினுள் பூர்த்தியாக்கப்பட்ட கட்டிடங்கள் பூர்த்தியாக்கப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொள்ளாது முழு வருடத்திற்குமுரிய பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்டது.

பெறுமானத் தேய்வு வீதங்கள் பின்வருமாறு.

மோட்டார் வாகனங்கள்	20%
இயந்திரங்கள்	10%
கருவிகள் மற்றும் உபகரணங்கள்	10%
அலுவலக உபகரணங்கள்	0%
குழாய்க் கிணறு/பயிர்ச் செய்கைக் கிணறு	10%
மரத் தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	06%
நிலையான கட்டிடங்கள்	03%
பகுதியளவு நிலையான கட்டிடங்கள்	33 1/3%

03. சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களாக இனங் காணப்பட்ட சொத்துக்கள் கிரயத்திற்குக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மீள் கணக்கீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் சேதம் ஏற்படுத்தப்பட்ட நட்டங்கள் கழித்துக் காட்டப்பட்டுள்ளன.

04. பின்வரும் அடிப்படையில் இருப்பு கணக்கிடப்பட்டது.

முந்திரிப் பருப்பு	:	தேறிய விற்பனை விலையில்
மரமுந்திரி விதை	:	உறுதிப்படுத்தப்பட்ட மாறுபடும் விலை / சந்தை விலை
மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள்	:	அந்தந்த மாகாணங்களில் சந்தை விலை / உயிருடனான எடை பிரகாரம்

தெங்கு	:	தேறிய விற்பனை விலை
ஏனைய அனைத்து இருப்புக்கள்	:	கிரயம் கணக்கிடப்பட்டது

05. பிரதான அலுவலகச் செலலவினங்களானது கிரய நிலையங்களுக்கு இடையே அதில் உள்ளடங்கியுள்ள மொத்த சம்பளச் செலவினங்களுக்கு ஏற்ப பகிர்ந்தளிக்கப்பட்டது.

06. தோட்டங்களின் சராசரி செலவு, விளைச்சல் தரும் மற்றும் விளைச்சல் அற்ற பகுதிகள் நாற்றுமேடை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றுக்கு இடையே அந்த பகுதிகளில் செலவிடப்பட்ட உண்மையான உழைப்பு நாட்களின் எண்ணிக்கையின் விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

07. விளைச்சல் தரும் பயிர்களின் தேய்மானம் ஆண்டுக்கு 5% எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

08. அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக் கடனுக்கான ஒதுக்கீடு மொத்த கடன் பட்டோரில் 3.53% எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒதுக்கக் கணக்கின் வித்தியாசம் ஆண்டுக்கான அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது.

09. பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடானது பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவையாற்றிய மொத்த வருடங்களின் எண்ணிக்கைக்கு அமையக் கணக்கிடப்பட்டது. பணிக்கொடை உரித்தைப் பெறுவதற்கு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த சேவைக் காலத்தைக் கணக்கீட்டு வருடத்தினுள் பூர்த்தி செய்துள்ளவர்களின் சேவைக் கிரயம் வருமானக் கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டது.

10. கிடைக்கப் பெற்ற மற்றும் கிடைக்க வேண்டியவற்றின் பெறுமதி அடிப்படையில் வருமானம் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றைக் கவனத்திற் கொண்டு பொருட்கள் விற்பனையின் வருமானம் இனங் காணப்பட்டுள்ளது.

- நிறுவனமானது ஆபத்து மற்றும் நன்மைகள் ஆகிய இரண்டையும் கொள்வனவாளருக்கு வழங்குகிறது.
- விற்பனை செய்யப்படும் பொருட்களின் உரிமைக்கோ அல்லது வினைத்திறனான நிர்வாகமொன்றை தக்க வைப்பதற்கோ நிறுவன முகாமைத்துவத்தின் தலையீடு காணப்பட மாட்டாது.
- வருமானத்தை நம்பகமான முறையில் இனங் காணக் கூடியதாக இருத்தல்.

- கொடுக்கல் வாங்கல் மற்றும் ஏற்புடைய பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்குக் கிடைக்கப் பெறலாம்.
- கொடுக்கல் வாங்கலுக்கு ஏற்புடைய அல்லது ஏற்புடையதாகக் கூடிய கிரயத்தை நம்பகமான முறையில் மதிப்பிடல்.

11. மூலதனச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மற்றும் தேய்மானமாகக் கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உண்மைப் பெறுமதி, ஏற்புடைய மூலதனச் சொத்துக்களிலிருந்து பதிவழித்ததன் பின்னர் அதற்குச் சமனான பெறுமதியை மூலதனக் கொடைகளிலிருந்து நீக்கிக் கணக்குப் புத்தகங்களில் வருமானமாக இனங் காணப்படும்.

12. மோட்டார் வாகன மீள் மீள் பெறுமானம் 2009.01.01 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறும் திகதியாக நிர்ணயிக்கப்படுவதோடு, அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தொழிநுட்பப் பொறியியலாளர் ஒருவரின் தலைமையிலான சுயாதீன ஆணைக்குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

13. ஒட்டுக் கன்று மற்றும் விதைக் கன்று உற்பத்திக்கு ஏற்புடைய நிர்வாகச் செலவினமானது சேவைகள் மற்றும் வணிகப் பிரிவுகளுக்கிடையே உற்பத்தி செய்யப்பட்ட உண்மையான கன்றுகள் மற்றும் பகிந்தளிக்கப்பட்ட கன்றுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றுக்கு ஏற்புடைய குறிப்புகள்

குறிப்பு 01

<u>சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்</u>

விபரம்	கிரயம்/மீள் பெறுமானம் பெறுமதி 2019.01.01 (ரூ.)	ஏற்புடைய வருடத்தின் சொத்துக்கள் சேர்ப்பனவுகள் /மீள் பெறுமானம் (ரூ.)	ஏற்புடைய வருடத்தின் சொத்துக்கள் நீக்கல்கள்/ விற்பனை (ரூ.)	சொத்தின் நடைமுறைக் கிரயம் மீள் கணக்கீட்டு பெறுமதி 2019.12.31 (ரூ.)	2019.01.01 ஆம் திகதியன்று பெறுமானத் தேய்வு (ரூ.)	2019 ஆம் ஆண்டிற்கு பெறுமானத் தேய்வு (ரூ.)	பெறுமானத் தேய்வு அகற்றல் அல்லது விற்பனை (ரூ.)	2019.12.31 ஆம் திகதியன்று திரட்டிய பெறுமானத் தேய்வு (ரூ.)	பதிவழிக்கப்பட்ட பெறுமதி (ரூ.)
அறுதியான காணி	26,657,256.54	45,568.00	-	26,702,824.54	-	-	-	-	26,702,824.54
நிலையான கட்டிடம்	55,053,589.95	506,200.00	1,036,560.62	54,523,229.33	20,036,369.26	1,564,198.26	185,647.91	21,414,919.61	33,108,309.72
பகுதியளவில் நிலையான கட்டிடம்	492,961.00	22,850.00	-	515,811.00	415,993.91	47,953.77	-	463,647.68	51,863.32
வாகனம்	102,410,837.84	5,636,270.00	662,500.00	107,384,607.84	91,146,979.18	8,244,357.91	662,498.00	98,728,839.09	8,655,768.75
இயந்திரங்கள்	18,710,629.98	1,032,433.47	-	19,743,063.45	12,970,410.89	1,039,368.69	-	14,009,779.58	5,733,283.87
கருவிகள் மற்றும் உபகரணங்கள்	9,153,942.82	118,784.50	23,890.00	9,248,837.32	7,827,064.31	223,639.69	14,360.92	8,036,343.08	1,212,494.24
அலுவலக உபகரணங்கள்	12,140,115.09	122,649.00	2,960.00	12,259,804.09	9,399,825.23	483,364.79	1,948.67	9,881,241.35	2,378,562.74
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	7,788,080.82	178,245.00	72,280.00	7,894,045.82	5,027,901.24	277,216.89	31,370.60	5,273,747.53	2,620,298.29
குழாய் கிணறு	1,063,181.18	-	76,160.00	987,021.18	651,521.46	68,682.29	55,850.67	664,353.08	322,668.10
பயிர்ச் செய்கை கிணறு	1,333,680.40	-	-	1,333,680.40	567,847.46	133,368.04	-	701,215.50	632,464.90
குளங்கள்	608,824.62	-	-	608,824.62	-	-	-	-	608,824.62
	235,413,100.24	**7,662,999.97**	**1,874,350.62**	**21,201,749.59**	**148,043,912.94**	**12,082,150.33**	**951,676.77**	**159,174,386.50**	**82,027,363.09**

55

2019.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றுக்குரிய குறிப்புகள்

குறிப்புகள் - 02
விளைச்சல் தரும் பயிர்ச் செய்கை

31.12.2018 (ரூ.)			31.12.2019 (ரூ.)
25,473,764.68	மரமுந்திரி	குறிப்புகள் - 02 (அ)	32,570,205.58
1,962,003.38	தெங்கு	குறிப்புகள் - 02 (ஆ)	1,699,541.67
27,435,768.06		மொத்தம்	**34,269,747.25**

குறிப்புகள் - 02 (அ)
விளைச்சல் தரும் பயிர்ச் செய்கை - மரமுந்திரி

31.12.2018 (ரூ.)	தோட்டம்	2019.01.01 ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)	2019.12.31 ஆம் திகதியன்று திரட்டிய பெறுமானத் தேய்வு (ரூ.)	2019.12.31 ஆம் திகதியன்று தேறிய பெறுமதி (ரூ.)
1,178,133.64	ஹாடி தோட்டம்	3,180,107.38	2,115,285.87	1,064,821.51
6,681,086.59	கமன்தளுவ தோட்டம்	18,387,204.86	13,109,162.19	5,278,042.67
5,836,574.60	புத்தளம் தோட்டம்	11,089,242.26	5,807,129.77	5,282,112.49
2,970,969.68	எளுவங்குளம் தா.இ.நிலையம்	13,933,185.28	11,658,874.86	2,274,310.42
426,828.59	விலச்சிய தா.இ.நிலையம்	655,569.86	261,519.76	394,050.10
4,258,537.12	நாலந்தை தா.இ.நிலையம்	5,963,253.57	2,002,879.13	3,960,374.44
1,329,031.48	மஹஒய தா.இ.நிலையம்	1,641,264.30	394,296.04	1,246,968.26
1,452,464.05	மொணராகலை தா.இ.நிலையம்	2,331,959.19	600,752.66	1,731,206.53
1,340,138.93	மாங்கேணி தோட்டம்	1,410,672.56	141,067.26	1,269,605.30
-	கொண்டாச்சி தா.இ.நிலையம்	10,598,646.17	529,932.31	10,068,713.86
25,473,764.68	மொத்தம்	**69,191,105.43**	**36,620,899.85**	**32,570,205.58**

குறிப்புகள் - 02 (ஆ)

விளைச்சல் தரும் பயிர்ச் செய்கை - தெங்கு

31.12.2018 (ரூ.)	தோட்டம்	2019.01.01 ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)	2019.12.31 ஆம் திகதியன்று திரட்டிய பெறுமானத் தேய்வு (ரூ.)	2019.12.31 ஆம் திகதியன்று பதிவழிக்கப்பட்ட பெறுமதி (ரூ.)
1,052,079.35	ஹாடி தோட்டம்	1,650,793.13	710,714.88	940,078.25
877,525.96	கமன்தளுவ தோட்டம்	2,437,612.22	1,688,946.87	748,665.35
32,398.07	புத்தளம் தோட்டம்	431,998.76	421,200.69	10,798.07
1,962,003.38		**4,520,404.11**	**2,820,862.44**	**1,699,541.67**

குறிப்பு - 03

விளைச்சல் தராத பயிர்ச் செய்கை

31.12.2018 (ரூ.)			31.12.2019 (ரூ.)
47,171,830.59	மரமுந்திரி	குறிப்பு - 03 (அ)	34,741,977.54
4,419,010.34	தெங்கு	குறிப்பு - 03 (ஆ)	3,120,120.63
51,590,840.93		மொத்தம்	**37,862,098.17**

குறிப்பு - 03 (அ)

விளைச்சல் தராத பயிர்ச் செய்கை - மரமுந்திரி

2018.12.31 ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)	தோட்டம்	2019.12.31 ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)
2,115,493.61	ஹாடி தோட்டம்	2,130,228.63
609,440.46	கமன்தளுவ தோட்டம்	706,026.95
8,078,550.11	புத்தளம் தோட்டம்	10,549,669.75
801,935.23	எளுவங்குளம் தாவர இனப் பெருக்க நிலையம்	1,269,855.41
-	மாங்கேணி தோட்டம்	143,601.75
269,852.11	மஹஓய தாவர இனப் பெருக்க நிலையம்	329,833.71
390,757.28	மொணராகலை தாவர இனப் பெருக்க நிலையம்	-
1,871,964.02	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	1,871,964.02
135,360.40	நெதகமுவ செயன்முறைப்படுத்தல் நிலையம்	135,360.40
11,568,077.41	ஓயாமடுவ தாவர இனப் பெருக்க நிலையம்	-
44,354.96	விலச்சிய தாவர இனப் பெருக்க நிலையம்	103,822.74
20,537,289.07	கொண்டாச்சி தாவர இனப் பெருக்க நிலையம்	16,504,322.41
748,755.93	திரியாய தாவர இனப் பெருக்க நிலையம்	997,291.77
47,171,830.59	மொத்தம்	**34,741,977.54**

குறிப்பு - 03 (ஆ)

விளைச்சல் தராத பயிர்ச் செய்கை - தெங்கு

2018.12.31 ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)	தோட்டம்	2019.12.31ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)
1,907,524.26	ஹாடி தோட்டம்	1,667,021.57
1,293,056.82	கமன்தளுவ தோட்டம்	1,453,099.06
1,218,429.26	ஓயாமடுவ தோட்டம்	-
4,419,010.34		**3,120,120.63**

குறிப்பு - 04

ஏனைய சிறிய கருத்திட்டங்கள்

2018.12.31 ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)		2019.12.31 ஆம் திகதியன்று கிரயம் (ரூ.)
482,874.09	தேக்கு மரக்கன்று கருத்திட்டம்	482,874.09
40,000.00	எள்	40,000.00
-	விளாம்பழக் கருத்திட்டம்	90,100.00
-	உப பயிர்ச் செய்கை - கௌப்பி	42,910.00
-	உப பயிர்ச் செய்கை - வட்டக்காய்	19,140.00
522,874.09		**675,024.09**

குறிப்பு - 05

நடைமுறைச் சொத்துக்கள்

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)	இருப்பு	2019.12.31 ஆம் திகதியன்று (ரூ.)
4,516,553.18	நானாவித	4,938,493.65
3,039,403.94	முந்திரிப் பருப்பு - விற்பனை நிலையங்கள்	3,801,512.96
4,550,542.23	- செயன்முறைப்படுத்தல் நிலையங்கள்	6,616,365.28
3,570,763.94	ஹகோதுடனான மரமுந்திரி	17,929,353.31
3,167,806.88	மரமுந்திரிக் கன்றுகள்	4,108,063.50
926,394.97	பொதியிடல் பொருட்கள்	870,163.72
251,677.48	மரமுந்திரி வைன்	-
199,650.00	தாய் விதைகள்	-
20,222,792.62		**38,263,952.42**

குறிப்பு - 06

வணிகக் கடன் பட்டோர் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)			2019.12.31ஆம் திகதியன்று (ரூ.)
3,367,412.32	வணிகக் கடன் பட்டோர்	5,520,248.22	
(118,869.69)	**கழி :- அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு**	194,865.00	5,325,383.22
3,486,282.01			
16,103,851.69	நானாவித கடன் பட்டோர்	17,987,795.01	
(2,106,184.42)	**கழி :- சேதங்களால் ஏற்படும் நட்டம்**	2,106,184.42	15,881,610.59
17,483,949.28			**21,206,993.81**

குறிப்பு - 07

வைப்பு முற்பணங்கள் மற்றும் முற் கொடுப்பனவுகள்

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)		2019.12.31 ஆம் திகதியன்று (ரூ.)
17,200.00	முற்பணங்கள்	58,535.00
275,843.03	முற் கொடுப்பனவுகள்	430,153.72
2,259,883.50	வைப்புக்கள்	5,604,238.35
2,552,926.53		**6,092,927.07**

குறிப்பு – 08

காசு மற்றும் காசுக்கு சமனானவை

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)				2019.12.31 ஆம் திகதியன்று (ரூ.)
94,988.86	இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி	1633704	(நடைமுறை)	504,139.63
520,003.09	இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி	1633705	(நடைமுறை)	1,871,315.45
761,484.77	இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி	1633710	(நடைமுறை)	317,402.54
99,061.58	இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி	1633711	(நடைமுறை)	174,875.87
29,996.32	இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி	1649789	(சேமிப்பு)	81,123.34
55,617.62	இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி	1649970	(சேமிப்பு)	57,768.15
15,593.10	இலங்கை வங்கி - ஜாஎல	813	(நடைமுறை)	15,593.10
50,000.00	மக்கள் வங்கி நுகெகொடை	10013	(நடைமுறை)	19,250.00
92,790.57	மக்கள் வங்கி நுகெகொடை	20011	(சேமிப்பு)	4,153.56
100,315.94	மக்கள் வங்கி நுகெகொடை	20020	(சேமிப்பு)	226,317.33
26,428.58	பிராந்திய அபிவிருத்தி வங்கி	687	(சேமிப்பு)	28,357.37
14,000.00	காசு - கையிலுள்ள மீதி (கொள்ளுப்பிட்டி)			89,210.00
76,750.00	காசு - கையிலுள்ள மீதி (ராஜகிரிய)			80,200.00
10,000.00	சில்லறைக் காசு கட்டுநிதி			10,000.00
50,000.00	எரிபொருள் கட்டுநிதி			50,000.00
34,650.25	வழியிலுள்ள காசு			-
5,000.00	காசு கட்டுநிதி - முத்திரை			5,000.00
70,000.00	மரமுந்திரி விற்பனை நிலையங்கள் கட்டுநிதி			70,000.00
200,000.00	காசாக்கப்படுவதற்கான காசோலைகள்			195,000.00
534,821.30	காசு - கையிலுள்ள மீதி (நாற்று மேடை)			966,232.80
8,558.50	காசு - கையிலுள்ள மீதி (விஸ்தரிப்பு)			21,125.50
213,387.00	காசு - கையிலுள்ள மீதி (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)			185,555.00
11,628.19	காசு - கையிலுள்ள மீதி (நெதகமுவ செயன்முறைப்படுத்தல் நிலையம்)			309.84
743.14	காசு - கையிலுள்ள மீதி (புத்தளம் செயன்முறைப்படுத்தல் நிலையம்)			7,172.00
-	காசு - கையிலுள்ள மீதி (ஹாடி தோட்டம்)			5,832.00
-	காசு - கையிலுள்ள மீதி (கமன்தலுவ தோட்டம்)			29,789.15
-	காசு - கையிலுள்ள மீதி (மாங்கேணி தாவர இனப்பெருக்க நிலையம்)			655.00
43,585.00	காசு - கையிலுள்ள மீதி (புத்தளம் தோட்டம்)			54,254.00
942.68	காசு - கையிலுள்ள மீதி (எளுவங்குளம் தோட்டம்)			1,410.23
115.00	காசு - கையிலுள்ள மீதி (மஹஓய தாவர இனப்பெருக்க நிலையம்)			-
-	காசு - கையிலுள்ள மீதி (எல்கடுவை தாவர இனப்பெருக்க நிலையம்)			38,375.00
0.90	காசு - கையிலுள்ள மீதி (விலச்சிய தாவர இனப்பெருக்க நிலையம்)			0.40
2,900.00	காசு - கையிலுள்ள மீதி (ஓயாமடுவ தாவர இனப்பெருக்க நிலையம்)			-
-	காசு - கையிலுள்ள மீதி (திரியாய தாவர இனப்பெருக்க நிலையம்)			200.00
-	காசு - கையிலுள்ள மீதி (பூநகரி தோட்டம்)			406.00
1,445.34	காசு - கையிலுள்ள மீதி (கொண்டாச்சி தாவர இனப்பெருக்க நிலையம்)			20,973.34
	சில்லறைக் காசு கட்டுநிதி (எளுவங்குளம் தோட்டம்)			15,000.00
	சில்லறைக் காசு கட்டுநிதி (ஹாடி தோட்டம்)			5,000.00
	சில்லறைக் காசு கட்டுநிதி (கமன்தலுவ தோட்டம்)			15,000.00
	சில்லறைக் காசு கட்டுநிதி (கொண்டாச்சி தோட்டம்)			20,000.00
	சில்லறைக் காசு கட்டுநிதி (பூநகரி தோட்டம்)			5,000.00
	சில்லறைக் காசு கட்டுநிதி (புத்தளம் தோட்டம்)			10,000.00
3,224,807.73	மொத்தம்			**5,201,996.60**

குறிப்பு - 09

ஏனைய தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற்ற அளிப்புகள்

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)		2019.12.31 ஆம் திகதியன்று (ரூ.)
6,117,869.61	வடக்கு கிழக்கு கரையோர சமூக அபிவிருத்தி கருத்திட்டம்	5,901,938.18
1,612,451.80	மேலதிக பெருந்தோட்ட பயிர்கள் அபிவிருத்தி அமைச்சு	-
10,025,445.91	சிறு ஏற்றுமதி பயிர்கள் மேம்பாட்டு அமைச்சு	9,864,409.09
17,755,767.32		**15,766,347.27**

குறிப்பு - 10

மூலதன ஒதுக்கம்

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)		2019.12.31 ஆம் திகதியன்று (ரூ.)
16,929,116.63	மீள் பெறுமான ஒதுக்கம் - வாகனங்கள்	16,929,116.63
512,730.22	ஏனைய மூலதன ஒதுக்கம்	512,730.22
17,441,846.85	மொத்தம்	**17,441,846.85**

குறிப்பு - 11

நீண்ட கால கடன்

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)		2019.12.31 ஆம் திகதியன்று (ரூ.)
3,500,000.00	நெல் சந்தைப்படுத்தல் சபை	
-		3,500,000.00
3,500,000.00	மொத்தம்	**3,500,000.00**

குறிப்பு - 12

நடைமுறை பொறுப்புக்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை

2018.12.31 ஆம் திகதியன்று (ரூ.)		2019.12.31ஆம் திகதியன்று (ரூ.)
23,891,408.03	நானாவித கடன் கொடுத்தோர்	26,189,521.41
	ஏனைய செலவுகள்	18,578,295.03
14,707,161.66	திரட்டிய செலவுகள்	7,555,987.61
38,598,569.69	மொத்தம்	**52,323,804.05**

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய விஸ்தரிப்புகள் வருமானக் கூற்று

	குறிப்புகள்		
விற்பனை	01		100,082,839.37
விற்பனைக் கிரயம			67,857,577.72
தேறிய இலாபம் (நட்டம்)			**32,225,261.65**
அரச மானியம் (மீண்டுவரும்)			60,000,000.00
வேறு வருமானங்கள்	02		48,343,281.71
			140,568,543.36
விநியோக செலவு	03	8,437,210.80	
நிர்வாக செலவினம்	04	132,329,845.72	
வேறு செலவினம்	05	29,739,778.69	
நிதிச் செலவினம்		246,958.89	
			170,753,794.10
வரிக்கு முந்தைய இலாபம்/(நட்டம்)			**(30,185,250.74)**
வருமான வரி (ஒதுக்கீடுகள்)		-	
வரிக்குப் பிந்தைய இலாபம்/நட்டம்)			**(30,185,250.74)**
மொத்த விஸ்தரிப்பு வருமானங்கள்			**(30,185,250.74)**

2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்றிற்கு ஏற்புடைய குறிப்புகள

குறிப்பு - 01

விற்பனை

		(ரூ.)	(ரூ.)
மரமுந்திரிப் பருப்பு		82,767,072.85	
கழி : உட் திரும்பல்		178,357.40	82,588,715.45
கன்றுகள்			15,645,315.00
கோதுடனான மரமுந்திரி			-
தெங்கு			1,848,808.92
			100,082,839.37

குறிப்பு - 02

வேறு வருமானங்கள்

வட்டி வருமானம் (சேமிப்புக் கணக்கு)	65,809.59
வட்டி வருமானம் (அனர்த்தக் கடன்/விசேட கடன்)	44,692.29
கோதுடனான மரமுந்திரி இறக்குமதி சேவைகள் கட்டணம்	235,000.00
நானாவித வருமானங்கள்	2,931,656.17
சுற்றுலா பங்களாக்களின் வாடகை வருமானம்	114,950.00
நட்ட ஈட்டுப் பெறுவனவுகள்	336,000.00
மூலதன மானிய முறைக் கடன் தீர்வு	44,615,173.66
	48,343,281.71

குறிப்பு - 03

	கூட்டுத்தாபனம் உழைத்த வருமானம்	மூலதன மானியம்	மொத்தம்
விநியோகச் செலவு	8,437,210.80	-	
	8,437,210.80	**-**	**8,437,210.80**

குறிப்பு - 04

	கூட்டுத்தாபனம் உழைத்த வருமானம்	மூலதன மானியம்	
நிர்வாகச் செலவு			
வணிக நாற்று மேடை	2,049,901.85		
தலைமை அலுவலகம்	116,496,751.31		
தெங்கு கடன் தீர்வு	226,020.27		
சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்	890,247.94		
மனித வள அபிவிருத்தி	-	171,197.90	
விஸ்தீரணப் பிரிவு	-	9,281,500.48	
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	-	3,214,225.97	
	119,662,921.37	**12,666,924.35**	**132,329,845.72**

குறிப்பு - 05

	கூட்டுத்தாபனம் உழைத்த வருமானம்	மூலதன மானியம்	
ஏனைய செலவினங்கள்			
ஹெலோபெல்டிஸ் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்	-	652,429.07	
சேதங்களும் நட்டங்களும் (வைன்)	251,677.48	-	
ஒயாமடுவ தோட்டக் கணக்கை மூடுதல்		14,480,914.24	
கன்றுகளுக்கான கிரயம் (மானிய நிகழ்ச்சித் திட்டம்)		12,520,339.09	
இறந்த கன்றுகள்	1,550,839.68		
இறந்த கன்றுகளினால் ஏற்பட்ட நட்டம்		283,579.13	
	1,802,517.16	**27,937,261.53**	**29,739,778.69**
	129,902,649.33	**40,604,185.88**	

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

நிதிப் பாய்ச்சற் கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதிப் பாய்ச்சற் கூற்று

2018.12.31 (ரூ.)	2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடம்	(ரூ.)	(ரூ.)
	செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான நிதிப் பாய்ச்சல்		
(39,642,728.37)	வருடத்தினுள் இலாபம்/நட்டம்		(30,185,250.74)
	காசல்லாத பெயர்ச்சிக்கு உட்படும் உருப்படிகள் தொடர்பான சீராக்கம்		
15,818,922.14	பெறுமானத் தேய்வு	12,082,150.32	
2,932,747.30	கடன் தீர்வு	3,420,039.98	
6,249,295.00	பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடுகள்	8,742,490.00	
142,476.11	அறவிடமுடியா கடனுக்கான பதிவழிப்பு அல்லது ஒதுக்கீடு	75,995.31	
(1,325,496.00)	பணிக்கொடைகளுக்கான மேலதிக ஒதுக்கீடு	-	
10,560.00	நிலையான சொத்துக்களின் மாற்றல்கள் மூலம் ஏற்பட்ட நட்டம்	922,673.86	
(57,549.95)	முந்தைய ஆண்டிற்கு ஏற்புடைய சீராக்கல்கள்	(290,325.00)	
630,182.49	விளைச்சல் தரும் பயிர்ச் செய்கையை பதிவழித்தல்	13,167,618.32	
-	இறந்த கன்றுகளினால் ஏற்பட்ட நட்டம்	(97,532.52)	
(387,048.47)	ஏனைய தரப்புக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற மானியம்	(1,989,420.05)	
96,873.30	ஏனைய சிறு கருத்திட்டங்களைப் பதிவழித்தல்	-	
(139,310.70)	வட்டி வருமானப் பெறுவனவுகள்	(110,501.88)	
(35,102,086.39)	மூலதனக் கொடுப்பனவுகளின் கடன் தீர்வு	(42,625,753.61)	
			(6,702,565.27)
(50,773,163.54)	**செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம்/நட்டம்**		(36,887,816.01)
	செயற்பாட்டு மூலதன மாற்றங்கள்		
4,717,608.40	இருப்பு - (அதிகரித்தல்) /குறைதல்	(18,041,159.80)	
1,970,589.48	கடன் பட்டோர் - (அதிகரித்தல்)/குறைதல்	(3,799,038.84)	
1,256,694.97	முற்பணங்கள் மற்றும் முற் கொடுப்பனவுகள் - (அதிகரித்தல்) /குறைதல்	(3,540,000.54)	
(4,403,509.51)	கடன் கொடுத்தோர் - (அதிகரித்தல்) /குறைதல்	20,876,408.41	
3,929,401.26	திரட்டிய செலவினம் - (அதிகரித்தல்) /குறைதல்	(7,151,174.05)	
7,470,784.60			(11,654,964.82)
(43,302,378.94)			(48,542,780.83)
(4,554,681.00)	பணிக்கொடைக் கொடுப்பனவுகள்		(1,400,402.00)
(47,857,059.94)	**செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய நிதிப் பாய்ச்சல்**		(49,943,182.83)
	முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவான நிதிப் பாய்ச்சல்		
(12,109,696.96)	நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்	(2,720,499.97)	
-	மேற்கொள்ளப்பட்டு வரும் மூலதனச் செலவுகள்	(69,112.00)	
(9,273,328.09)	புதிய பயிர்ச் செய்கைக்கு முதலீடு செய்தல்	(10,305,868.21)	
139,310.70	வட்டி வருமானப் பெறுவனவுகள்	110,501.88	
-	ஏனைய சிறு ருத்திட்டங்களுக்கான முதலீடுகள்	(152,150.00)	
(21,243,714.35)			(13,137,128.30)
(69,100,774.29)			(63,080,311.13)
	நிதி நடவடிக்கைகளினால் உருவான நிதிப் பாய்ச்சல்		
66,520,000.00	அரச மானியம்		65,057,500.00
(2,580,774.29)	காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் தேறிய (அதிகரித்தல்) /குறைதல்		1,977,188.87
5,805,582.02	வருடத்தின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவை	**(குறிப்பு 01)**	3,224,807.73
3,224,807.73			**5,201,996.60**

(குறிப்பு 01)	**2019.01.01 ஆம் தியதியன்று**	**2019.12.31 ஆம் தியதியன்று**
கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு	3,190,157.48	5,201,996.60
வழியிலுள்ள காசு	34,650.25	-
	3,224,807.73	**5,201,996.60**

2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றக் கூற்று

2018 ஆம் ஆண்டிற்கான மொத்தம் (ரூ.)	மாற்றங்கள்	ஹ (ரூ.)	அரச மானியம் (ரூ.)	மூலதன மானியம் வடக்கு கிழக்கு சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ரூ.)	மூலதன மானியம் மேலதிக பெருந்தோட்ட பயிர்ச்செய்கை அமைச்சு (ரூ.)	மீள் பெறுமான ஒதுக்கம் (ரூ.)	பிரதான சிறு ஏற்றுமதிப் பயிர் மேம்பாட்டு அமைச்சு (ரூ.)	ஏனைய மூலதன ஒதுக்கம் (ரூ.)	இலாப நட்டக் கணக்கு (ரூ.)	2019 ஆம் ஆண்டிற்கான மொத்தம் (ரூ.)
149,270,113.03	2019.01.01 ஆம் திகதியன்று மீதி	40,000,000.00	175,414,265.06	6,117,869.61	1,612,451.80	16,929,116.63	10,025,445.91	512,730.22	(110,011,179.38)	140,600,699.85
(57,549.95)	முந்திய ஆண்டிற்கு ஏற்புடைய சீராக்கல்கள்	-	-	-	-	-	-	-	(1,000,831.00)	(1,000,831.00)
66,520,000.00	வருடத்தினுள் கிடைக்கப் பெற்ற மானியங்கள்	-	70,000,000.00	-	-	-	-	-	-	70,000,000.00
(35,489,134.86)	இலாப் நட்டக் கணக்கிற்கு மாற்றல்	-	(42,625,753.61)	(215,931.43)	(1,612,451.80)	-	(161,036.82)	-	-	(44,615,173.66)
21,660,621.02	மொத்தத் தேறிய வருமானம்	-	-	-	-	-	-	-	(30,185,250.74)	(30,185,250.74)
(61,303,349.39)	வருமானத்தை விஞ்சிய செலவினம் - சேவைகள் பிரிவு	-	-	-	-	-	-	-	-	-
140,600,699.85	**2019.12.31 ஆம் திகதியன்று மீதி**	**40,000,000.00**	**202,788,511.45**	**5,901,938.18**	-	**16,929,116.63**	**9,864,409.09**	**512,730.22**	**(141,197,261.12)**	**134,799,444.45**

தவிசாளர்
இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

11.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் எனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 01 இன் 38 ஆம் பிரிவு பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் முந்தைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியிலான தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும் எனினும் மீளாய்வாண்டிற்கு ஏற்ப கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 19 இன் 139 ஆம் பிரிவு பிரகாரம் ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கீடுகளை முறையானதொரு முதலீட்டுத் திட்டத்திற்கு அமைய முதலீடு செய்தல் வேண்டும் எனினும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் ரூ. 35,045,966 மீதிக்கு இணையான எந்தவொரு முதலீடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள ரூ. 7,555,988 திரட்டிய செலவினங்களின் கூட்டுத்தொகையான ரூ. 817,934 பெறுமதியான திரட்டிய செலவினத்தை 2022 மார்ச் 01 ஆம் திகதி வரையிலும் சீராக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கு ஏற்புடைய ரூ. 186,453 பெறுமதியான திரட்டிய செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் இனங் காணப்பட்டு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) 2 மோட்டார் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காக செலவிடப்பட்ட ரூ. 695,720 பெறுமதியான செலவினத்தை மோட்டார் வாகனக் கணக்கில் பற்று வைத்து ஏற்புடைய பெறுமதியை பெறுமானத் தேய்வாக சீராக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூ. 604,876 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கணக்கீட்டு வருடத்தின் இறுதித் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு சரிபார்ப்பின் படி 02 மரமுந்திரி செயன்முறைப்படுத்தல் நிலையங்களில் பதப்படுத்தப்பட்ட மரமுந்திரிப் பருப்பின் இருப்பு 3078 கிலோ கிராம் ஆகும் எனினும் பௌதிக இருப்பைக் கவனத்திற் கொள்ளாது இருப்பு

சரிபார்ப்பு அறிக்கையில் உள்ளடக்கப்படாத 839 கிலோ கிராம் அளவுடைய நொறுக்கப்பட்ட மரமுந்திரிப் பருப்புக்களுடன் பௌதிக இருப்புப் பெறுமதிகளுக்குச் சமனற்ற பெறுமதிகளுடனான அட்டவணைகளைப் பயன்படுத்தி இறுதி இருப்புப் பெறுமதி கணக்கிடப்பட்டதன் காரணமாக இறுதி இருப்பு மற்றும் வருடத்தின் இலாபம் ரூ. 1,557,247 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இறுதி இருப்பு கணக்கிடப்பட்ட கிரயத் தகவல்களுக்கு அமைய மரமுந்திரி விற்பனை நிலையங்களில் காணப்பட்ட ஆரம்ப இருப்பு, செயன்முறைப்படுத்தல் நிலையத்திலிருந்து கிடைக்கப் பெற்ற இருப்பு, விற்பனைகள், இலவச விநியோகம் என்பவற்றைக் கவனத்திற் கொள்கையில் காணப்பட வேண்டிய மற்றும் உண்மையான இறுதி இருப்புக்கு இடையே 827,740 கிலோ கிராம் மரமுந்திரி பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதோடு, அதன் பெறுமதி ரூ. 2,099,321 ஆகும்.

(ஏ) நானாவித கடன்பட்டோரின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு மரமுந்திரிக் கன்றுகள் வழங்குவதன் பொருட்டு கிடைக்க வேண்டிய தொகையாகக் கணக்கில் பதியப்பட்டிருந்த 07 வருடங்களுக்கும் மேற்பட்ட ரூ. 9,466,200 தொகையை ஏற்புடைய அமைச்சு தற்போது செயற்படாத காரணத்தினால் அறவிட முடியாது என அவதானிக்கப்பட்டாலும் மேற்குறித்த கடன் மீதிக்கு அறவிட முடியா மற்றும் ஐயக் கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு 2019 டிசம்பர் மாதம் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்த மரமுந்திரி வருமானம் ரூ. 79,425,899 ஆகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மரமுந்திரி விற்பனை வருமானம் ரூ. 82,767,073 ஆகும். அதற்கமைய பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட மரமுந்திரி வருமானம் மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள மரமுந்திரி வருமானத்திற்கு இடையே ரூ. 3,341,174 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஒ) மேலதிக நேரக் கொடுப்பனவு, இணைந்த படிகள் மற்றும் வாகன பழுதுபார்ப்புக்கள் உள்ளடங்கலாக ரூ. 111,177 பெறுமதியான வருடத்தின்

செலுத்த வேண்டிய செலவினமானது நானாவித கடன் கொடுத்தோரின் கீழ் பதியப்பட்டிருப்பினும் குறித்த செலவினத்தை உறுதி செய்வதற்கு ஏற்புடைய எந்தவொரு எழுத்து மூல சான்றும் கணக்காய்வுகளுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், இந்த அறிக்கையின் திகதியன்றும் கூட மேற்குறித்த செலவினம் செலுத்தி முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கடந்த 6 வருடங்களாக செலுத்த வேண்டிய வேறு செலவினங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள மொத்தப் பெறுமதி ரூ. 3,602,678 நிவாரணக் கொடுப்பனவுகள் மற்றும் பயிர்ச் செய்கைக் காப்புறுதிக் கொடுப்பனவுகள், உறுதி செய்யக் கூடிய இன்வொய்ஸ் போன்ற ஏற்றுக் கொள்ளக் கூடிய எந்தவொரு எழுத்துமூல சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3 நிறுவனத்தின் 2019 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்க உத்தேசிக்கும் கூட்டுத்தாபனத்தின் 2019 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்களானது ஏனைய தகவல்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக் கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடுஇ நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலும் உறுதிப்படுத்தவோ கருத்துத் தெரிவிக்கவோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்விற்கு ஏற்புடையதாக மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போதோ வேறு வழியிலோ பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு எட்டிய வரையில் அளவு சார் ரீதியில் பொருந்தவில்லையா என்பது குறித்து கவனம் செலுத்துவதே எனது பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2019 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போதுஇ அதில் பொருண்மை சார் ரீதியில் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என நான் தீர்மானித்தால்இ திருத்தம் செய்வதற்காக ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினருக்கு அவ் விடயங்களை தொடர்பாடல் செய்தல் வேண்டும். தொடர்ந்தும் திருத்தங்களை மேற்கொள்ளாது பிழையான குறிப்புக்கள் காணப்படின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரைக்கு அமைய காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் நான் அவற்றை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பேன்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதோடுஇ முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான இருப்பிற்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து

வருமானங்கள்இ செலவினங்கள்இ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.5 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் ;**

ஒட்டு மொத்த அடிப்படையில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றைப் பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டு

செயற்படுத்தப்பட்டன. மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாத போதும், சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை குறித்த பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறதா என்பது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்கு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை குறித்த அடிப்படையைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஏற்புடைய தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது என நான் தீர்மானித்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதோடு, அவ் வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாவிட்டால் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்தியங்கும் நிலை முடிவுறுத்தப்படலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பது மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்ட தரப்பினருக்கு நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க, கணக்காய்விற்குத் தேவையான 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர ஏனைய அனைத்துத் தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்பவற்றை நான் பெற்றுக் கொண்டுள்ளதோடு, எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(I) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைய ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்துள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு முந்தைய ஆண்டின் ஒத்துள்ள தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(I) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.2 (அ) இல் தரப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தலில் பின்வரும் வெளிப்படுத்தலை செய்யுமளவிற்கு எதுவும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு கூட்டுத்தாபனம் தொடர்பில் ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையில் வழமையான வணிக செயற்பாட்டிற்கு வெளியே தொடர்பொன்று காணப்படுகின்றமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்த்து ஏதேனுமொரு எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்காது செயற்பட்டுள்ளமை.

சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு	அவதானிப்புக்கள்
(அ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம்	2011 ஆம் ஆண்டிலிருந்து வருமான வரியை செலுத்துவதற்கு மற்றும் வருமான வரி அறிக்கைகளை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை எனினும் குறித்த காலப்பகுதிகளுக்கு ஏற்புடைய ரூ. 779,483 பெறுமதியான பிடித்து வைத்த வரி (WHT) கிடைக்க வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 18 ஆம் பிரிவு	இன்வொய்ஸ் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கணக்காய்வுக் கட்டணங்களைத் தீர்த்தல் வேண்டும் எனினும் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூ. 2,552,208 மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை சீராக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம்	கணக்கீட்டு ஆண்டிற்கு ஏற்புடைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியை உரிய காலத்தில் செலுத்தாமை மற்றும் சீ அறிக்கைகளை சரியாக சமர்ப்பிக்காமை காரணமாக ரூ. 24,427 தொகையை மிகையாக செலுத்த நேரிட்டிருந்தது.
(ஈ) 2003 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் திகதிய மற்றும் பிஈடீ/12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	கணக்கீட்டு வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் எனினும் 02 வருட மற்றும் 08 மாத தாமதத்தின் பின்னர் 2022 பெப்ரவரி 07 ஆம் திகதியன்று 2019 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.
(உ) 2012 ஜூலை 24 ஆம் திகதிய பொது தொழில் முயற்சிகள் குறித்த செயற்குழுத் தீர்மானங்கள்	கூட்டுத்தாபனத்திற்கு சட்டபூர்வமான உரிமையற்ற காணிகளின் சட்டபூர்வ உரிமையைக் கையகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது தொழில் முயற்சிகள் குறித்த செயற்குழுவினால் அறிவிக்கப்பட்டிரு-ப்பினும், பிரதேச செயலகம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்டுள்ள 11,239 ஏக்கர் பரப்பிலான மரமுந்திரி செய்கைக் காணிகளின் சட்டபூர்வ உரிமையைக் கூட்டுத்தாபனத்திற்குக் கையகப்படுத்துவதற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமையக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாகாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக குறித்த காலப்பகுதிக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாகப் பெறுகை செய்து பயன்படுத்தப்படவில்லை.

(அ) மீளாய்வாண்டில் அரச மூலதன மானியமாக ரூ. 70,000,000 கூட்டுத்தாபனத்திற்குப் பணமாகக் கிடைத்திருந்ததுடன்இ குறித்த தொகையில் ஏறத்தாழ ரூ. 10,301,285 மரமுந்திரி மற்றும் தெங்கு செய்கைகளின் கீழ் மூலதனமிடப்பட்டிருந்தது. அரச மூலதன மானியங்களிலிருந்து மூலதனமாக்கப்பட்ட பெறுமதியைப் போன்று இரண்டு மடங்கிற்கும் அதிக பெறுமானமான ரூ. 25,839,693 மீண்டுவரும் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது. ரூ. 33,859,022 தொகை மூலதன மானிய வைப்புக் கணக்கில் மீதியாக இருத்தல் வேண்டும் எனினும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று குறித்த கணக்கின் மீதி ரூ. 504,140 என அவதானிக்கப்பட்டது. அதற்கமைய மூலதன மானியமானது வெளிவாரியான பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் புத்தளம் மற்றும் கமன்தளுவ ஆராய்ச்சி நிலையங்களுக்கு மூலதன மானியத்தின் கீழ் ரூ. 3,214,226 செலவிடப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டினுள் எந்தவொரு புதிய ஆராய்ச்சியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இரண்டு நிலையங்களிலும் முந்தைய வருடங்களிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட ஏறத்தாழ 08 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தன. மேலும், ஆராய்ச்சிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடியவாறு தொடர்ச்சியான மற்றும் முறையான முன்னேற்ற அறிக்கைகளும் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) மரமுந்திரிக் கன்று உற்பத்திச் செயற்பாட்டை உரியவாறு வழிநடாத்தாமை மற்றும் பராமரிக்கப்படாமையின் காரணமாக முறையே ரூ. 49.45 மற்றும் ரூ. 36.23 ஆகு செலவுடன் உற்பத்தி செய்யப்பட்ட 24,159 ஒட்டு மரமுந்திரி கன்றுகள் மற்றும் 9,831 விதை மரமுந்திரி கன்றுகள் என்றவாறு அகற்ற நேரிட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 1,550,840 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) <u>மரமுந்திரிகை கூட்டுததாபனம் மூலம் கன்றுகள் நடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஒயாமடுவ தோட்டம் மற்றும் எளுவங்குளம் மார்ட்டின் இப்பில் பண்ணையுடன் பரிமாற்றிக் கொள்ளல்.</u>

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான ஒயாமடுவ பண்ணையினால் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த 250 ஏக்கர் அளவிலான பகுதி மீண்டும் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்குக் கையகப்படுத்தப்பட்டு எளுவங்குளம் 441 ஏக்கர் மார்ட்டின் இப்பில் பண்ணை அமைந்துள்ள காணியின் உரிமை 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) எளுவங்குளம் அமைந்துள்ள மார்ட்டின் இப்பில் பண்ணையுடனான காணியை இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் வனாத்தவில்லு பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டு வரவதாகவும் குறித்த காணித் துண்டிற்கான குத்தகை அங்கீகாரம் கிடைக்கும் வரை காணியில் எந்தவொரு அபிவிருத்தியையம் மேற்கொள்ள வேண்டாமென WAN/LND/01/LTLES/(3) 24 ஆம் இலக்க மற்றும் 2019 நவம்பர் 29 ஆம் திகதிய கடிதம் மூலம் காட்டப்பட்டிருப்பினும் 50 ஏக்கர் நிலப் பரப்பில் காடழிப்பு மற்றும் நிலத்தை பண்படுத்தல் போன்வற்றிற்கு ரூ. 785,000 பெறுமதிக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஏறத்தாழ 08 ஏக்கரின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திடடத்திற்கு இணையாக ஒயாமடுவ தாவர இனப்பெருக்க பூங்காவை நிர்மாணிப்பதற்காக ஒயாமடுவ பிரதேசத்தில் 100 ஏக்கர் அளவிலான காணி மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததோடுஇ பின்னர் 2012 மற்றம் 2013 ஆகிய வருடங்களில் மேலும் 150 ஏக்கர் வழங்கப்பட்டிருந்தது. மேற்குறித்த காணியில் மரமுந்திரி மற்றும் தெங்கு செய்கை

அபிவிருத்தி மற்றும் கட்டிட நிர்மாணிப்பிற்காக கூட்டுத்தாபனத்தினால் ரூ. 14,480,914 செலவிடப்பட்டிருந்தது. பின்னர் வனாத்தவில்லு பிரதேச செயலாளர் பிரிவில் எளுவங்குளம் மார்ட்டின் இப்பில் பண்ணையில் 441 ஏக்கர் அளவிலான காணியை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கி ஒயாமடுவ மரமுந்திரி மற்றும் தெங்கு ஆகியவற்றினால் அபிவிருத்தியடைந்த காணியை தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்கு வழங்கியதன் காரணமாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தினால் செலவிடப்பட்ட மேற்குறித்த ஆகு செலவானது கூட்டுத்தாபனத்திற்குப் இலாபமற்ற செலவினமாக அமைந்தது.

(iii) 2019 ஆம் ஆண்டில் ஒயாமடுவ தோட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மரமுந்திரி அறுவடை 1344.5 கிலோ கிராமாக இருந்ததோடுஇ எளுவங்குளத்தில் அமைந்துள்ள காணிப் பரிமாற்றத்தை அடுத்து ஒயாமடுவ தோட்டத்திலிருந்து எதிர்வரும் வருடங்களில் கிடைக்கவிருந்த மரமுந்திரி அறுவடை இல்லாமற் போனது.

(iv) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் எளுவங்குளம் மரமுந்திரி விதை பூங்கா அருகாமையில் புதிய மரமுந்திரி வகைகளை விநியோகிக்கும் மற்றும் ஒப்பீட்டு ரீதியிலான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் நோக்கில் பரிமாற்றம் செய்யப்பட்ட எளுவங்குளம் காணியை கட்டம் II என 2019 ஆம் ஆண்டில் 6.7 மில்லியன் ரூபா பெறுமதியான மூலதனத் தொகையைப் பயன்படுத்தி 50 ஏக்கர் மரமுந்திரி செய்கை மூலம் அபிவிருத்தி செய்வதற்குப் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருப்பினும் குறித்த இலக்கு அடையப் பெற்றிருக்கவில்லை.

2.3 **வேறு விடயங்கள்**

(அ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்கு செலவுத் தாள் இன்றி வாடிக்கையாளர்களினால் மரமுந்திரிப் பருப்பு மீளத் திரும்பல்களாக ரூ. 178,357 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. தற்போது நிலவும் உள்ளக நிர்வாகத்தின் குறைப்பாடுகள் காரணமாக ஏற்புடைய

மரமுந்திரிப் பருப்பை மீள அனுப்பியதற்கான காரணம் அல்லது கிடைக்கப் பெற்ற இருப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பது குறித்து உறுதியான அல்லது தெளிவான பதில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டி-ருக்கவில்லை.

(ஆ) கிட்டிய கடந்த 05 வருடங்களில் அதாவது 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனம் பின்வருமாறு தொடர்ச்சியாக குறிப்பிடத்தக்க நட்டத்தை அறிக்கையி-ட்டிருந்தது. வரிசை அமைச்சினால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட மானியங்களை நீக்கி கவனத்திற் கொண்டால் கடந்த 05 வருடங்களில் கூட்டுத்தாபனம் 115 மில்லியன் ரூபா முதல் 145 மில்லியன் ரூபா வரையான வித்தியாசத்தில் மிகப் பாரிய நட்டத்துடன் தொழிற்பட்டிருந்தது. இதற்கமைய மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை சவாலுக்கு உட்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

வருடம்	நட்டம்	அரச மானியம் (மீண் டுவரும்)	அரச மானியம் (மூலதன)	வருமானமாக இனங் காணப்பட்ட அரச மானியம் (மூலதன)	அரச மா னியம் தவிர்ந்த நட்டம்
	ரூ. 1	ரூ. 2	ரூ. 3	ரூ. 4	ரூ. 1-2-4
2015	(47,728,042)	66,100,000	35,000,000 31,950,000	31,186,501	(145,014,543)
2016	(36,525,411)	48,000,000	40,000,000	31,181,987	(115,707,398)
2017	(42,335,722)	54,000,000	54,000,000	34,025,205	(130,360,927)
2018	(39,642,728)	50,000,000	66,520,000	35,263,122	(124,905,850)
2019	(30,185,251)	60,000,000	70,000,000	44,615,174	(134,800,425)

(இ) கோதுடனான மரமுந்திரிஇ முந்திரிப் பருப்பு மற்றும் முந்திரி கன்றுகள் அலகு கிரயக் கணக்கீட்டு முறையொன்றை உருவாக்காமை மற்றும் உற்பத்திக் கிரயத்தைக் கணக்கிடுகையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக மொத்த பெறுமதி ரூ. 32,455,294 ஆன இறுதி இருப்புப் பெறுமதியைக் கணக்கிட்டு முறையைப் பரிசீலிக்க முடியாமற் போனது.

டப்ளியூ.பி.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

12. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் கூட்டுத்தாபன தரப்பினரால் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

1.2 (அ) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் ஆரம்பத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை (அதாவது மீளாய்வு வருடத்திற்கு முந்தைய வருடம் வரை) நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பயன்படுத்தப்பட்ட, அதே போன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்/தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அவ்வப்போது கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் கணக்காய்வின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்று மாதிரிகள், 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களின் பேரில் கவனத்திற் கொள்ளத் தக்க மாற்றமொன்றிற்கு உட்படுத்தப்பட்டது. அதன் போது ஏற்புடைய மாதிரிகளின் மாற்றத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடுவதற்காக 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் தகவல்களை சமர்ப்பிப்பதில் நடைமுறை சிக்கல் தோன்றியதன் காரணமாக குறித்த தேவைப்பாட்டை உரியவாறு பூர்த்தி செய்ய முடியாமற் போனது.

சமனான நிதிக் கூற்று மாதிரிகளைப் பயன்படுத்துவதால் 2020 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒப்பீட்டு ரீதியிலான நிதித் தகவல்களை சமர்ப்பிப்பதில் எவ்வித சிக்கல்களும் தோன்றாது என்பதோடு, தற்போது தயாரிக்கப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடனும் ஏற்புடைய ஒப்பீட்டு ரீதியிலான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.2 (ஆ) கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் பொதுத் திறைசேரியினால் கிடைக்கப் பெறும் மீண்டுவரும் கொடையானது ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவிற்கேனும் போதுமதானதல்ல என்பதால், ஓய்வூதிய பணிக்கொடை செலுத்த முடியாதுள்ளமையால் அதன் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் வருமானங்களைப் பயன்படுத்த நேரிடுகிறது. கூட்டுத்தாபனத்தின் வருமானங்களிலிருந்து மேற்கொள்ள வேண்டிய வேறு திடீர் மற்றும் பல அத்தியாவசிய செலவுகள் காணப்படுவதால், பணிக்கொடைக் கொடுப்பனவுக் கடப்பாடு தொடர்பில் பிறிதான முலீட்டை செய்வதற்கான வாய்ப்பு உருவாகவில்லை.

எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை சீராகும் வரை பணிக்கொடை ஒதுக்கீட்டிற்கு மாதமொன்றிற்கு ரூ. 100,000/= வீதம் ஆகும் வகையில் முதலீட்டை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பொருட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு தேவையான மேல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2 (இ) கணக்காய்வு ஐய வினாக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2019.12.31 ஆம் திகதியன்று காணப்படும் ரூ. 7,55,988/= திரட்டிய செலவினங்களின் 89% இற்கும் அதிகமான பகுதியை சீராக்குவதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபனத்தின் நிதி இடர்ப்பாடுகள் காரணமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 817,934/= திரட்டிய செலவை சீராக்குவது தொடர்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

1.2 (ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 186,453/= திரட்டிய செலவினங்கள் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 2021.01.01 ஆம் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை கணக்குப் புத்தகங்களில் சரியாகப் பிரதிபலிக்கிறது.

1.2 (உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகன பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு செலவாகியுள்ள ரூ.695,720/= ஏற்புடைய மோட்டார் வாகனங்களின் முழுமையான எஞ்சின் பழுதுபார்த்தல்களுக்காக (Overhauled Complete Engine Repairs) செலவிடப்பட்டிருப்பதுடன், இந்த பழுதுபார்த்தல்கள்

காரணமாக ஏற்புடைய மோட்டார் வாகனங்களின் விளைத்திறனான ஆயுட் காலம் குறிப்பிடத்தக்க வருடங்களினால் உயர்வடைந்துள்ளமையால், ஏற்புடைய செலவுகள் இவ்வாறு மூலதனமாக்கலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.2 (ஊ) கூட்டுத்தாபனத்தின் நெந்தகமுவ மற்றும் புத்தளம் போன்ற மரமுந்திரி செயன்முறைப்படுத்தல் நிலையங்களின் தலைவர்களான அவற்றின் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் எழுத்துமூலமான அவர்களது அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 2019.12.31 ஆம் திகதியன்று பௌதீக ரீதியில் காணப்படும் மரமுந்திரிப் பருப்பு இருப்பிற்கு அமைய அன்றைய தினம் கணக்கிடப்பட்ட இறுதி இருப்புக்களின் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இதற்கு ஏற்புடைய பொருட் கணக்கெடுப்புக் குழு அறிக்கைகளை சமர்ப்பிக்கையில் நிகழந்த தவறு காரணமாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பௌதிக மரமுந்திரிப் பருப்புக்களின் இருப்பு வேறுபட்டதாகப் பதியப்பட்டுள்ளதுடன், செயன்முறைப்படுத்தல் நிலையங்களின் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் முழுப் பொறுப்பும் ஏற்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பௌதிக மரமுந்திரிப் பருப்புக்களின் இருப்பு அளவைக் கருத்திற் கொண்டு மரமுந்திரிப் பருப்புக்களின் இறுதி இருப்பு மதிப்பிடப்பட்டுள்ளமையால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் ரூ. 1,557,247/= ஆல் இலாபம் மிகைப்படுத்திக் காட்டப்படவில்லை.

1.2 (எ) கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் அறிக்கைகள் பேணப்பட்டு வந்தாலும் அதன் பொருட்டு உரிய முறையொன்றைப் பயன்படுத்தும் தேவைப்பாடு காணப்பட்டது. தற்போதுள்ள முறைக்கு அமைய சந்தைப்படுத்தல் பிரிவினால் பேணப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வருட இறுதி மரமுந்திரிப் பருப்புக்களின் இருப்பு கணக்கெடுப்பின் காரணமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இருப்பு வித்தியாசம் அவதானிக்கப்பட்டாலும் நிதிப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மரமுந்திரிப் பருப்புக்களின் இறுதி இருப்பிற்கு ஏற்புடைய அளவானது அதற்குரிய மூல ஆவணங்களின் அடிப்படையில் சரியாகக்

கணக்கிடப்பட்டவை என்பதால் உண்மையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூ. 2,099,321/= மரமுந்திரிப் பருப்பிற்கான பற்றாக்குறை இல்லை.

எவ்வாறாயினும், ஏற்புடைய கணக்காய்வு அவதானிப்புக்களைக் கவனத்திற் கொண்டு எதிர்வரும் காலங்களில் சந்தைப்படுத்தல் பிரிவின் அறிக்கைகளை உரிய முறையில் மற்றும் முறையானதொரு செயன்முறைக்கு அமையப் பேணுதல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, நிதிப் பிரிவின் மரமுந்திரிப் பருப்பு விறபனைக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடைய ஆவணங்களை மாதாந்தம் சந்தைப்படுத்தல் பிரிவின் ஆவணங்களுடன் ஒப்பிட்டு சரியான முறையில் பேணுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1.2 (ஏ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் பெறுமதியை அறவிடுவதற்குக் குறிப்பிடத்தக்க ஒரு காலப் பகுதி முழுவதும் அதிக முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது எனினும் குறித்த முயற்சியானது இது வரை தோல்வியடைந்துள்ளது. எவ்வாறாயினும் இந்தக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு நடைமுறை வருடத்திலிருந்து இதன் பொருட்டு அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் (சேதம் ஏற்படுத்தும் நட்டங்கள்) ஒதுக்கீடொன்றை செய்யும் இயலுமை குறித்து ஆராய்ந்து அதற்குத் தெவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1.2 (ஐ) இந்தக் கணக்காய்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூ. 82,767,073/= பெறுமதியான விற்பனை வருமானம், அற்குரிய பணப் பற்றுச் சீட்டுக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பண இன்வொய்ஸ்களைப் பயன்படுத்தி கணக்கில் பதியப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டிற்குரிய சரியான விற்பனை வருமானமாகும். கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் பிரிவினால் தனது தீர்மானமெடுத்தல்களுக்குப் பயன்படுத்துவதற்காகப் பேணப்படும் ஆவணங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 79,425,899/= விற்பனை வருமானம் மேற்குறித்தவாறு மூல ஆவணங்களின் அடிப்படையில் சரியாகக் கணக்கிடப்பட்ட அல்லது நிதிப் பிரிவிடம் அறிக்கையிடப்பட்ட விற்பனை வருமானம் பெறுமதியற்றது என்பதுடன்இ அதற்கமைய நிதிக் கூற்றக்களில்

காட்டப்பட்டுள்ள விற்பனை வருமானம் மற்றும் விற்பனைப் பிரிவின் அண்ணளவான ஆவணங்களுக்கு அமையக் காட்டப்பட்டுள்ள விற்பனை வருமானங்கள் ஒன்றுக்கொன்று ஒப்பிட்டு அவற்றுக்கு இடையிலான வித்தியாசங்களை முன்வைப்பது நடைமுறை சாத்தியமற்றது. அதே போன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள விற்பனை வருமானத்தை உறுதி செய்வதற்குரிய அனைத்து மூல ஆவணங்களும் நிதிப் பிரிவிடம் காணப்படுவதுடன், அதற்கிணங்க தேவையான உறுதிப்படுத்தல்களை செய்து கொள்ளலாம். எவ்வாறாயினும் இத்தகைய சிக்கல் மிகுந்த நிலைமைகளைக் குறைப்பதற்கு சரியான மூல ஆவணங்களைப் பயன்படுத்தி நிதிப் பிரிவின் தகவல்களுடன் இணக்கமடையக் கூடியவாறு சரியான விற்பனை வருமான தகவல்களைத் தமது ஆவணங்களில் பேணுமாறு விற்பனைப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2 (ஒ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 111,177/- செலவினத்திற்கு ஏற்புடைய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுவதுடன், அவற்றைக் கணக்காய்விற்கு உட்படுத்தக் கூடியவாறு உரிய முறையில் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்புடைய திரட்டிய செலவினம் தொடர்பில் தேவையான சீராக்கல் கணக்குகளைப் புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2 (ஓ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 3,602,678/- செலுத்த வேண்டிய மானியங்கள் மற்றும் பயிர்ச் செய்கைக் காப்புறுதி செலவினங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனக் கணக்காய்வுக் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், ஏற்புடைய பொறுப்புக்கள் தொடர்பில் நடைமுறைக் கடப்பாடு இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு இல்லை என்பது உறுதியாகியுள்ளமையால், குறித்த பெறுமதிகளைப் பதிவழிப்பதற்குக் கணக்காய்வுக் குழு மூலம் பரிந்துரைக்கப்பட்டது. குறித்த கணக்காய்வுக் குழப் பரிந்துரைக்குப் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதற்கமைய இந்தப் பொறுப்புக்களை 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.2 (அ) உள்நாட்டு இறைவரி திணைக்களம் கலந்துரையாடி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பழைய வருடங்களின் வரி அறிக்கைகள் தொடர்பில் செயற்பட வேண்டிய முறை குறித்த ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2.2.2 (ஆ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 2018.12.31 ஆம் திகதியன்று தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் செலுத்த வேண்டியுள்ள ரூ. 2,552,208/- கணக்காய்வுக் கட்டணங்களிலிருந்து தற்போது ரூ. 528,006/- தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன், நிதி ஏற்பாடுகள் கிடைக்கும் முறைக்கு அமைய செலுத்த வேண்டிய எஞ்சிய கணக்காய்வுக் கடடணங்களையும் துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.2 (இ) கூட்டுத்தாபனத்தின் நிதி இடர்ப்பாடுகள் காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை உரிய காலப் பகுதியில் செலுத்தாமையின் காரணமாக இந்த ரூ. 24,427/- மிகையை செலுத்த நேரிட்டுள்ளதுடன், இது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் இவ்வாறான நியதிச்சட்டக் கொடுப்பனவுகளைக் கால தாமதமின்றி செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.2.2 (ஈ) இலங்கை மரமுந்திரிகை கூட்டத்தாபனத்திற்கு 2019 ஆம் ஆண்டு வரை இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட முறையாக அமைந்தது கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு கிரய நிலையங்களுக்கு வெவ்வேறாகப பரீட்சை மீதி தயரிக்கப்பட்டு, அதன் மூலம் ஒவ்வொரு கிரய நிலையங்களுக்கு வெவ்வேறாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இறுதியில் அவற்றை ஒன்றிணைத்தலாகும். அதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் வணிக மற்றும் சேவை பிரிவுகளின் செயற்பாடுகள் தொடர்பில் வெவ்வேறாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டமையினால், குறித்த பிரிவுகளுக்குத் தீர்மானமெடுக்கும் நடவடிக்கைகளையும் முறைப்படி மேற்கொள்ளும் இயலுமை காணப்பட்டது.

2019 ஆம் ஆண்டிற்கும் மேற்குறித்த முறையையே பின்பற்றி இறுதிக் கணக்குகளை உரிய காலப் பகுதியில் பூர்த்தி செய்து, கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதோடு, குறித்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்களினால் ஏற்புடைய கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை வரைவும் கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடரி லக்கம்	தோட்டம்/ விதை பூங்கா	உரிமை	மாவட்டம்	பி.செ.பிரிவு	ஏக்கர் அளவு
1.	எளுவங்குளம் - கட்டம் - I	அரசாங்கத்துக்குரியது	புத்தளம்	வனாத்தவில்லுவ	210
2.	எளுவங்குளம் - கட்டம் - II	அரசாங்கத்துக்குரியது	புத்தளம்	வனாத்தவில்லுவ	406
3.	ஆச்சிகெவத்த	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	புத்தளம்	வனாத்தவில்லுவ	961
4.	கமன்தளுவ	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	புத்தளம்	ரஸ்நாயக்கபுர	548
5.	ஹாடி	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	மட்டக்களப்பு	வாழைச்சேனை	365
6.	பூநகரி	அரசாங்கத்துக்குரியது	கிளிநொச்சி	பூநகரி	479
7.	கொண்டாச்சி	அரசாங்கத்துக்குரியது	மன்னார்	முசலி	6,498
8.	திரியாய	அரசாங்கத்துக்குரியது	திருகோணம லை	கோமரங்கடவ ளை	35
9.	மாங்கேணி	அரசாங்கத்துக்குரியது	மட்டக்களப்பு	கோரளைப்பற்று வடக்கு	1,075
10.	விலச்சி	வன பாதுகாப்பு திணைக்களம்	அனுராதபுரம்	மஹவிலச்சிய	25
11.	சுதுவத்துர - ஆர	வன பாதுகாப்பு திணைக்களம்	மொணராக லை	மொணராகலை	45
12.	மஹஓய	வன பாதுகாப்பு திணைக்களம்	அம்பாறை	மஹஓய	81
13.	நாலந்தை	எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனி	மாத்தளை	மாத்தளை	135
14.	வெல்லங்குளம்	அரசாங்கத்துக்குரியது	மன்னார்	மேற்கு மாந்தை	500
	மொத்தம்				**11,363**

மேற்குறித்த அட்டவணையின் தொடரிலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள 210 ஏக்கர் நிலப்பரப்பிலான எளுவங்குளம் கட்டம் I காணி நீண்ட கால குத்தகை அடிப்படையின் கீழ் இந்தக் கூட்டுத்தாபனத்திற்குக் கையகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கமைய வனாத்தவில்லு பிரதேச செயலகத்தின் மூலம் அதற்குரிய தவணைப் பணம் மற்றும் குத்தகைப்

பணத்தை செலுத்துமாறு இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பணிகள் பூர்த்தியானவுடன் குறித்த காணியின் சொத்துவ உரிமையுடனான குத்தகை உறுதிப்பத்திரம் இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகும்.

அதே போன்று மேற்குறித் தொடரிலக்கம் 2,6,7,8,9 மற்றும் 14 இன் கீழ் தரப்பட்டுள்ள எளுவங்குளம் கட்டம் II, பூநகரி, கொண்டாச்சி, திரியாய, மாங்கேணி மற்றும் வெல்லங்குளம் போன்ற தோட்டங்கள் மற்றும் விதை பூங்காக்கள் மொத்தமாக 8,993 ஏக்கர் ஆகக் காணப்படும் காணிகளின் உரிமையை நீண்ட காலக் குத்தகை அடிப்படையின் கீழ் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்குக் கைமாற்றுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய குறித்த காணிகள் அமைந்துள்ள பிரதேசங்களின் பிரதேச செயலாளர்களுடன் இணைந்து தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதே போன்று இங்கு தொடரிலக்கம் 3,4 மற்றும் 5 இன் கீழ் தரப்பட்டள்ள ஆச்சிகெவத்தை, கமன்தளுவ மற்றும் ஹாடி போன்ற தோட்டங்களின் மொத்தப் பரப்பான 1,874 ஏக்கர் காணிப் பகுதிகளைக் கூட்டுத்தாபனத்திற்குக் கையகப்படுத்துவதற்குக் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உத்தியோகத்தர்களுடன் ஆரம்பக் கட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கமைய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குறித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைவு அறிக்கைக்குக் கூட்டுத்தாபனத்தினால் பதில்கள் முன்வைக்கப்பட்டதுடன், அதன் போது கிரய நிலையங்களுக்கு ஒவ்வொரு பரீட்சை மீதிகளுக்குப் பதிலாக ஒட்டுமொத்த கூட்டுத்தாபனத்திற்கும் பரீட்சை மீதியொன்றைத் தயாரித்து, அதன் மூலம் இறுதிக் கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் அதுவரை கணக்காய்வு ஐய வினாக்கள் சமர்ப்பிக்கப்படாத கணக்கீட்டு முறைகளுக்குப் புறம்பாக மேற்குறித்தவாறு பரீட்சை மீதியொன்றைத் தயாரிப்பது சிரமமாக இருந்தமையால் 2019 ஆம் ஆண்டிற்குக் கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இறுதிக் கணக்குகளைப் பூர்த்தியாக்க முடியாமற் போனதுடன், அதற்கமைய கூட்டுத்தாபனத்திற்குப் பழைய இறுதிக் கணக்குகளை நீக்க நேரிட்டது.

பின்னர் புதிய முறையைப் பின்பற்றி 2019 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன், அதற்குக் குறிப்பிடத்தக்கதொரு காலப்பகுதி செலவானதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தாமதம் ஏற்பட்டது.

எவ்வாறாயினும் தற்போது 2020 மற்றும் 2021 போன்ற வருடங்களுக்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன், தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து இறுதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட பரிந்துரைக்குக் கிடைக்கப் பெற்றுள்ள பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு அமைய குறித்த நிதிக் கூற்றுக்களையும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.2 (உ) இதன் கீழ் தற்போது உரிமை கையகப்படுத்தப்படாத பின்வரும் காணிகள் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பு :

ஏற்புடைய காணிகளின் மொத்தப் பரப்பு 11,239 ஏக்கர் என இந்தக் கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அனைத்து தகவல்களையும் கவனத்திற் கொள்கையில் ஏற்புடைய சரியான ஏக்கர் அளவு 11,363 ஏக்கர் ஆகும்.

ஏனைய காணிகளின் உரிமையை இந்தக் கூட்டுத்தாபனம் கையகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விடயப் பொறுப்பு அமைச்சுடன் இணைந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன்,

எவ்வாறாயினும் அதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை மிக நீளமானது என்பதால் குறிப்பிடத்தகவொரு காலம் செலவாகிறது. ஏற்புடைய காணிகளின் உரிமையைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் மற்றும் விடயப் பொறுப்பு அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.4 (அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 25,839 மி. செலவினமானது மீண்டுவரும் செலவினமாக இனங் காணப்பட்டிருப்பினும், கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரி செய்கை விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மூலதன செலவினத்தின் கீழ் ஒதுக்கப்படும் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினமே அதில் உள்ளடங்கியுள்ளது. அதே போன்று 2019 ஆம் ஆணடில் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு கூட்டல்கள்/கொள்வனவுகளுக்கு செலவிடப்பட்டுள்ள ரூ. 7.66 மி. மூலதனச் செலவினத்தைக் கருத்திற் கொள்ளாது இந்தக் கணக்காய்வுப் பந்தியின் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. ஏனைய செலவினங்கள் தொடர்பில் ஏற்புடைய தகவல்களைப் பெற்றுக் கொண்டு தேவையான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.2.4 (ஆ) மரமுந்திரி என்பது பல்லாண்டுப் பயிர் என்பதால் குறித்த பயிர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஆராய்ச்சி நடவடிக்கைகளினதும் இறுதி முடிவைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்புடைய ஆராய்ச்சி செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக சில வருடங்கள் முழுவதும் மேற்கொள்ள வேண்டும். இந்தக் கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முந்தைய வருடங்களிலிருந்து தொடரும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

ஏற்புடைய தொடர்ந்து வரும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவாக தற்போது மேம்படுத்தப்பட்ட உயர் தரத்திலான 11 புதிய மரமுந்திரி வகைகள் துறைக்கு அறிமுகம் செய்யக் கூடியதாக இருப்பதுடன், 2023 ஆம் ஆண்டில்

மேலும் மேம்படுத்தப்பட்ட 02 புதிய மரமுந்திரி வகைகள் துறைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

மீளாய்வாண்டில் புதிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனக் கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டாலும் பின்வரும் புதிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. தண்டு மற்றும் வேரை அரிக்கும் வண்டைக் கட்டுப்படுத்தவதற்கு இரசாயன கிருமி நாசினிகளைப் பரீட்சித்துப் பார்த்தல்.
2. மரமுந்திரி செய்கைக்குக் காலநிலைக் காரணிகளின் தாக்கம்
3. மரமுந்திரி செய்கைக்கு Mycorrhiza பூஞ்சைகளின் தாக்கம்.
4. மரமுந்திரி அறுவடையை சேகரித்ததன் பின்னர் காலம் மற்றும் அதன் நிறைக்கு இடையிலான தொடர்பு.

கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் மாதாந்தம் பிரதான அலுவலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் முன்னேற்ற அறிக்கையொன்று பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதோடு, இதற்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வயம்ப பல்கலைக்கழகத்தின் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்தின் பேராசியர் ஒருவரின் தலைமையில் நடாத்தப்படும் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச் மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களிலும் ஏற்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மற்றும் இற்றைப்படுத்தல்கள் குறித்து கலந்துரையாடப்படும். ஏற்புடைய கலந்துரையாடல் குறிப்புக்களும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

கூட்டுததாபனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றமாக இதுவரை உயர் தரத்திலான 11 மரமுந்திரி வகைகளை மரமுந்திரி செய்கைத் துறைக்கு அறிமுகப்படுத்தல், மரமுந்திரி செய்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஹெலோபெல்டீஸ் பூச்சியின் சேதத்தை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தவதற்கு மொஸ்பிலான் கிருமி நாசினியை அறிமுகப்படுத்தல், மரமுந்திரி

செய்கையின் தண்டுப் புழுவின் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு நொயுலூரான் / ரிபோன் கிருமி நாசினியை அறிமுகப்படுத்தல் போன்ற மரமுந்திரி செய்கையின் அபிவிருத்தி மற்றும் உற்பத்தித் திறனுக்குத் துணையாக அமையும் பல நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

2.2.4 (இ) கூட்டுத்தாபனத்தின் நியமங்களுக்கு அமைய வர்த்தக மரமுந்திரி நாற்று மேடைகளில் ஒட்டு மரமுந்திரி நாற்றுக்கள் உற்பத்தி செய்கையில் ஒட்டு முறை வெற்றியடையாமற் போவதற்கு இடமளிக்கும் உச்சபட்ச சதவீதம் 20% ஆவதோடு, வெற்றியளிக்காத குறித்த ஒட்டுக் கன்றுகள் பெரும்பாலும் மரணிக்கலாம். மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த ஒட்டு கன்றுகளின் எண்ணிக்கையான 304,317 கன்றுகளுடன் ஒப்பிடுகையில் மேற்குறித்தவாறு ஒட்டு முறை வெற்றியடையாது மரயித்த இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 24,259 ஒட்டு மரமுந்திரி கன்றுகள் 8% ஐ அண்மித்த இடமளிக்கக் கூடிய சதவீதமுடையதாகும். அவ்வாறு இடமளிக்கக் கூடிய சதவீதத்தினால் கன்றுகள் மரணித்தலின் ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்க நேரிடும் நட்டத்தை சாதாரண விரயமாகக் கருதி குறித்த நட்டத்தை உள்ளடக்கக் கூடியவாறு ஒட்டு மரமுந்திரிகளின் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று மரமுந்திரி கன்றுகள் உற்பத்தியின் போது கன்றுகள் மரணிப்பதற்கு இடமளிக்கும் உச்சபட்ச சதவீதம் 5% ஆவதோடு, மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டுமொத்த விதை கன்றுகளின் எண்ணிக்கையான 136,409 கன்றுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மரணித்த விதை கன்றுகள் 9,831 கன்றுகள் 7% இற்கு அண்மித்த சதவீதமுடையதாகும். அதற்கமைய இடமளிக்க முடியாத விதை கன்றுகள் மரணிக்கும் சதவீதம் 2% இற்கு அண்மித்தது என்பதுடன், மீளாய்வாண்டின் உற்பத்திக் கிரயத்தைக் கருத்திற் கொள்கையில் குறித்த அசாதாரணமான விரயத்தின் (அதாவது இடமளிக்க முடியாத கன்றுகள் மரணிக்கும் அளவு) அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் அண்ணளவாக ரூ. 109,072/= ஆகும்.

அதற்கமைய இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒட்டு மற்றும் விதை கன்றுகள் மரணித்தலின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூ. 1,550,840/= ஆக வரையறுப்பது நியாயமற்றதாகும்.

2.2.4 (ஈ)(i)(ii) இந்த ஒயாமடுவ தாவர இனப்பெருக்க நிலையத்தின் காணியானது தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை மூலம் இலங்கை மரமுந்திரி கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதுடன், அதற்கமைய ஏற்புடைய காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் இந்தக் காணியைச் சுற்றி அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மின்சார வேலியொன்று காணப்பட்டதுடன், உரிய பராமரிப்பு இல்லாததன் காரணமாக ஏற்புடைய மின்சார வேலி அழிவடைந்தமையினால் ஒயாமடுவ விதை பூங்காவிற்கு காட்டு யானைகள் பெருமளவில் உட்புகுவதன் மூலம் அங்கு மரமுந்திரி செய்கைக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. இதற்கமைய குறிப்பிடத்தக்க அளவான கோதுடனான மரமுந்திரி அறுவடையை உற்பத்தி செய்ய முடியாமற் போனமையின் காரணமாக ஒயாமடுவ தாவர இனப்பெருக்க நிலையம் இலாபத்துடன் பேணப்பட்டு வந்த சந்தர்ப்பத்தில் இந்தக் கூட்டுத்தாபனத்தின் எளுவங்குளம் தோட்டத்திற்கு அருகிலான கால்நடை வள அபிவிருத்தி நிலையத்தின் உரிமையின் கீழ் இயங்கும் மார்ட்டின் இப்பில் பண்ணையை மேற்குறித்த ஒயாமடுவ தாவர இனப்பெருக்க நிலையம் அமைந்துள்ள காணியுடன் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு வாய்ப்பு கிட்டியது.

இந்த ஒயாமடுவ தாவர இனப்பெருக்க நிலையக் காணியின் செய்கைக்கு தொடர்ச்சியாகக் காட்டு யானைகளினால் ஏற்படுட்டுள்ள பாரிய அச்சுறுத்தல், குறித்த தாவர இனப்பெருக்க நிலையத்தின் நடவடிக்கைகளுக்க நடைமுறையில் ஒதுக்கக் கூடிய கூட்டுத்தாபன பணிக்குழு மிகவும் வரையறுக்கப்பட்டதாக அமைதல் மற்றும் ஏற்புடைய காணியின் எதிர்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முதலீடு செய்யக் கூடிய தொகை மிகவும் மட்டடுப்பத்தப்பட்டதாக இருத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்திற் கொள்கையில் எதிர்வரும் வருடங்களில் குறித்த தாவர இனப்பெருக்க நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய கோதுடனான அறுவடை

அளவு ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுதலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பரிமாற்றத்திற்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தியது.

அதற்கமைய புதிய மரமுந்திரி செய்கை மூலம் கூட்டுத்தாபனத்திற்குத் துரித நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் எளுவங்குளம் மார்ட்டின் இப்பில் பண்ணையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டதுடன், காணப்பட்ட நிதி ஏற்பாடுகள் பிரகாரம் தற்போது 35 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய மரமுந்திரி செய்கை நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. அதே போன்று 2023 ஆம் ஆண்டிலும் இந்தப் பண்ணையில் மேலும் 40 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய மரமுந்திரி செய்கையை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதே போன்று காணித் துண்டின் சந்தை விலை, காணியின் உண்மையான பொருளாதாரப் பெறுமதி, அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதி (தற்போது எளுவங்குளம் மாட்டின் இப்பில் பண்ணைக்கு அருகிலுள்ள காணித் துண்டில் கூட்டுத்தாபனத்தின் பிரதான விதை பூங்காவொன்று வெற்றிகரமாகப் பேணப்படடு வருகிறது) மரமுந்திரி செய்கைக்குப் பொருத்தமான சூழல் காரணிகள் போன்ற அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொள்கையில் ஒயாமடுவ தோட்டத்துடன் எளுவங்குளம் மார்ட்டின் இப்பில் பண்ணையைப் பரிமாற்றம் செய்வது கூட்டுத்தாபனத்திற்கு எல்லா வகையிலும் இலாபகரமானது என்பதைக் குறிப்பிட முடியும் என்பதுடன், அதற்கமைய ஒயாமடுவ தாவர இனப்பெருக்க நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்குக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட ஆக செலவை ஒரு வீண் செலவு எனக் குறிப்பிடுவது பொருத்தமற்றது.

2.3 (அ) கடன் பத்திரங்களைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படாத போதும் மரமுந்திரிப் பருப்புக்களை மீள அனுப்புதல் தொடர்பில் பொருட்களின் பெறுவனவுப் பத்திரங்களை சரியாகத் தயாரித்து குறித்த முந்திரிப் பருப்பு இருப்பை சரியாக ஏற்றுக் கொண்டு, மீள அனுப்பியவற்றின் பெறுமதியை சரியாகக் கணக்கிட்டு குறித்த பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தி

ஏற்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், அதற்கமைய முறைப்படி கடன் பத்திரங்களைத் தயாரித்து அதன் ஊடாக மீள அனுப்புதல் குறித்த கொடுக்கல் வாங்கல்கள் கணக்குப் புத்தகங்களில் அறிக்கையிடப்படும்.

2.3 (ஆ) இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனமானது வணிகத்தைப் போன்றே சேவை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனமாவதுடன், நாட்டில் மரமுந்திரி செய்கை விஸ்தரிப்பு மற்றும் ஒட்டுமொத்த மரமுந்திரி துறைக்கு ஏற்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பனவே குறித்த பிரதான சேவை நடவடிக்கைகளாகும். கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த பணிக் குழுவில் 60% இற்கு அண்மித்தவர்கள் மேற்குறித்த சேவை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கடமைகளில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்களது சேவை நடவடிக்கைகள் மூலம் உரித்தாகும் பொருளாதார நன்மைகளை நிதிசார் ரீதியில் அளவிட்டு கணக்கில் பதிதலானது பொதுவாக மேற்கொள்ளப்படுவதில்லை. அதே போன்று வருடாந்தம் அரசாங்கத்தின் திறைசேரியிடமிருந்து இந்தக் கூட்டத்தாபனத்திற்கு உரித்தாகும் மீண்டுவரும் ஏற்பாட்டில் ஏறத்தாழ 85%-90% மேற்குறித்த சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பணிக்குழுவிற்கு சம்பளம் வழங்குவதற்காகவே செலவிடப்படுகிறது.

மேற்குறித்த சேவை நடவடிக்கைகளாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருததி சேவைகளுக்குப் பிறிதான வருமான மற்றும் செலவினக் கணக்கொன்றைத் தயாரிக்கப்பட மாட்டாது என்பதுடன், குறித்த கிரய நிலையங்களின் கிரயங்களும் கூட்டுத்தாபனத்தின் வணிக செயற்பாடுகளுக்கு ஏற்புடைய இலாபமானது நிலையங்களுக்கு ஏற்புடைய கிரயங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு கணக்குப் பதியப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தின் சேவை நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய கிரயம் மேற்குறித்தவாறு கணக்கில் பதியப்பட்டாலும் குறித்த சேவை வழங்கல் மூலம் பொமுவில் உரித்தாகும் நன்மைகள் கணக்கில் பதியப்பட மாட்டாது என்பதால் அந்த நிலைமை குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், தேசிய கணக்காய்வு அலுவலக உத்தியோகத்தர்களிடமிருந்தும் தேவையான

ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு சேவை நடவடிக்கைகளின் நன்மைகள் தொட்டுணர முடியாத சொத்துக்கள் மூலம் கணக்குப் புத்தகங்களுடன் தொடர்புபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே போன்று கூட்டுத்தாபனததின் விற்பனைகளை மேலும் மேம்படுத்தி மற்றும் செலவினத்தை முகாமைத்துவம் செய்து இலாபத்தை விருத்தி செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கமையத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.3 (இ) கோதுடனான மரமுந்திரி மற்றும் மரமுந்திரி கன்றுகள் தொடர்பில் கிரயத்தைக் கணக்கிடுவதற்குக் காணப்படும் முறையில் சிக்கலான நிலை இல்லை என்பதோடு, கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிப் பருப்பு உற்பத்தி வகைகள் பல காணப்படுவதால் ஒவ்வொரு மரமுந்திரிப் பருப்பு உற்பத்திக்கு வெவ்வேறாகக் கிரயத்தைக் கணக்கிடுதலானது சிக்கலான ஒரு செயன்முறையாகும். எவ்வாறாயினும் இந்தக் கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கமைய மரமுந்திரிப்

பருப்புக்களின் உற்பத்திக் கிரயத்தைக் கணக்கிடுவதற்கு முறையான ஒரு முறையை வகுப்பதற்கு நிபுணத்துவ அறிவுடனான குழுவொன்றைப் பொருத்தமானவாறு நியமித்துத் தருமாறு விடயப் பொறுப்பு அமைச்சிடம் எழுத்துமூலம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதே போன்று மீளாய்வாண்டிற்கு அமைவாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கோதுடனான மரமுந்திரி, மரமுந்திரிப் பருப்பு மற்றும் மரமுந்திரிக் கன்றுகளுக்கு உண்மையாக செலவிடப்பட்டுள்ள கிரயத்தின் அடிப்படையில் ஏற்புடைய இறுதி இருப்புப் பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளதுடன், அதன் போது குறித்த இருப்புக்களுக்கு ஏற்புடைய திகதியன்று தேறிய பெறுமதி தொடர்பிலும் கவனம் செலுத்தி இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

13. இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

ரூ.(000)

இலாப நட்டக் கணக்கு	2019 Rs.	2018 Rs.	2017 Rs.	2016 Rs.	2015 Rs.
தேறிய விற்பனை	100,082	94,931	100,951	94,906	75,297
விற்பனைக் கிரயம்	(67,857)	(61,023)	(80,182)	(68,648)	(55,055)
தேறிய இலாபம்	**32,225**	**33,908**	**20,769**	**26,258**	**20,242**
ஏனைய வருமானங்கள்	48,343	10,544	15,522	28,224	13,974
மீண்டுவரும் ஏற்பாடுகள்	60,000	15,077	18,700	16,923	27,798
நிர்வாகச் செலவுகள்/ஏனைய செலவுகள்	(167,334)	(38,407)	(38,893)	(39,141)	(44,001)
பெறுமானத் தேய்வு	(3,420)	539	244	(634)	(992)
வணிக நடவடிக்கைகளினால் கிடைக்கப் பெற்ற தேறிய இலாபம்	**(30,186)**	**21,661**	**16,342**	**31,630**	**17,021**
சேவைகள் பிரிவு - வருமானத்தை விஞ்சிய செலவுகள்	**-**	**(61,303)**	**(58,678)**	**(68,155)**	**(64,749)**
தேறிய இலாபம்/நட்டம்	**(30,186)**	**(39,642)**	**(42,336)**	**(36,525)**	**(47,728)**
ஐந்தொகை					
நடைமுறையல்லா சொத்துக்கள்					
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	82,027	87,369	89,363	100,869	110,208
விளைச்சல் தரும் பயிர்ச்செய்கை பராமரிப்பு	34,270	27,436	22,870	29,303	31,442
விளைச்சல் தராத பயிர்ச்செய்கை பராமரிப்பு	37,862	51,591	50,446	41,362	33,243
மேற்கொள்ளப்பட்டு வரும் மூலதன வேலைகள்	69	-	1,726	-	-
ஏனைய சிறிய கருத்திட்டங்கள்	675	523	620	949	806
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்	**154,903**	**166,919**	**165,025**	**172,483**	**175,699**
நடைமுறைச் சொத்துக்கள்					
இருப்பு	38,264	20,222	24,940	28,916	30,131
வியாபாரக் கடன் பட்டோர் மற்றும் ஏனைய பெறுவனவுகள்	21,207	17,484	19,597	20,798	24,411
முற்பணங்கள் மற்றும் முற் கொடுப்பனவுகள்	6,093	2,553	3,810	4,841	4,287
நிதி மற்றும் நிதிக்குச் சமனானவை	5,202	3,225	5,806	7,874	38,846
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்	**70,766**	**43,484**	**54,153**	**62,429**	**97,675**
மொத்தச் சொத்துக்கள்	**225,669**	**210,403**	**219,178**	**234,912**	**273,374**
உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்					
உரிமைகள்					
ஆரம்ப மூலதனம்	40,000	40,000	40,000	40,000	40,000
அரச நிதியீட்டம்	202,788	175,414	143,996	123,860	114,881
ஏனைய தரப்புக்களின் நிதியீட்டம்	15,766	17,756	18,143	18,530	18,917
மூலதன ஒதுக்கம்	17,442	17,442	17,442	17,442	17,442
இலாப நட்டக் கணக்கு	(141,197)	(110,011)	(70,311)	(27,975)	8,550
மொத்த உரிமைகள்	**134,799**	**140,601**	**149,270**	**171,857**	**199,790**
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்					
பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடுகள்	35,046	27,704	27,335	40,060	52,471
நீண்ட காலக் கடன்	3,500	3,500	3,500	-	-
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்	**38,546**	**31,204**	**30,835**	**40,060**	**52,471**
நடைமுறைப் பொறுப்புக்கள்					
வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	52,324	38,598	39,073	22,995	21,113
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்	**52,324**	**38,598**	**39,073**	**22,995**	**21,113**
மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்	**225,669**	**210,403**	**219,178**	**234,912**	**273,374**
தேறிய சொத்து வருமானம் %	(22.4)	(28.2)	(28.3)	(21.3)	(23.9)
தேறிய இலாப விகிதம்	(30.2)	(41.8)	(41.9)	(38.5)	(63.4)
நடைமுறை விகிதம்	1.4	1.1	1.4	2.7	4.6
நடைமுறை சொத்து விகிதம்	0.4	0.6	0.7	1.5	3.2
மொத்த வருமானத்தின் மீதான மொத்த செலவினம்	(0.9)	(0.8)	(0.8)	(0.1)	(0.8)